بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

ஆசிரியர்
முஸ்ஸம்மில் அஹ்மது

துணை
ஆசிரியர்
அப்துர் ரஹ்மான் தாஹிர்

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்
வார இதழ் - காதியான்

Weekly
BADAR Qadian
Tamil

www.akhbarbadr.in

தொகுதி
10
இதழ்
51 - 52

வருடாந்திர
சந்தா
ரூபாய் 600

ஹிஜ்ரீ கமரி 1447 ஜமாஅதிஸ் ஸானீ 26 -04 ரஜப் ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 ஃபத்ஹ் 18 - 25 டிசம்பர் 18 - 25 2025
Postal Reg No.GDP- 39/2023-2025


## இஸ்லாமிய போதனைகளின் ஒளியில்
## சமுதாய ஒற்றுமையின் முக்கியத்துவமும் அருட்களும்




யூ.கே ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்தின்போது
உலகளாவிய ஒற்றுமைக்கான புத்துணர்வூட்டும் காட்சி
அன்பு நிறைந்த ஆன்மிக கரத்தில் முழு உலகின் கரங்கள்



ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

(அய்யதஹுல்லாஹ்) அவர்களின் நிழற்படம்

## பத்ர் சிறப்பிதழிற்காக ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய நேசம் மிகு தூதுச் செய்தி

---

## இஸ்லாமிய போதனைகளில் சமுதாய ஒற்றுமைக்கான முக்கியத்துவம் மற்றும் பரக்கத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன இன்று அவற்றின் செயல் வடிவமாக அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நிழலில் அஹ்மதிய்யா ஜமாஅத் உள்ளது

---

**“இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் சமுதாய ஒற்றுமையின் முக்கியத்துவமும் அருட்களும்” என்ற தலைப்பில் பத்ர் வார இதழ் சிறப்பிதழ் வெளியீட்டிற்காக ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கியுள்ள அகப்பார்வை மிக்க தூதுச் செய்தி பத்ர் வாசகர்கள் படித்து பயன்பெறும் பொருட்டு கீழே சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் ஹுஸூர் அக்தஸ் அவர்கள் மிகுந்த பணிகளுக்கு மத்தியிலும் பத்ர் பத்திரிகை வாசகர்களுக்காக தமது அருளுக்குரிய தூதுச் செய்தியை அனுப்பி வைத்ததற்காக பத்ர் வார இதழ் நிர்வாகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது**

அன்பிற்குரிய பத்ர் வார இதழ் காதியான், வாசகர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு!

“இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் சமுதாய ஒற்றுமையின் முக்கியத்துவமும் அருட்களும்” என்ற தலைப்பில் ஒரு சிறப்பிதழை வெளியிடுவதற்கான நற்பேறு பத்ர் வார இதழுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்! அல்லாஹ் இதனை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக! ஆமீன்!

இது தொடர்பாக தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. நான் இந்த அடிப்படையில் சில விஷயங்களை எடுத்துரைக்க விரும்புகின்றேன். முஸ்லிம்கள் பரஸ்பரம் அன்புடனும், சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் இருக்க வேண்டும் என்று இஸ்லாம் போதனை வழங்கியுள்ளது. மேலும் தங்களுக்கிடையே கருத்து வேறுபாடு மற்றும் பிரிவினை கொள்வதிலிருந்து தடுத்துள்ளது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا

நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வின் கயிறை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்;

மேலும் பிரிந்து போய் விடாதீர்கள். (ஆலி இம்ரான்: வசனம் 104)

இதேபோன்று ஒரு ஹதீஸில் இவ்வாறு உள்ளது:

அல்லாஹ் எனது சமுதாயத்தை வழிகேட்டில் ஒன்றிணைக்க மாட்டான்; அல்லாஹ்வின் உதவி ஜமாஅத்துடனேயே இருக்கின்றது என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

مَنْ شَذَّ شُذَّ اِلَى النَّارِ۔

எந்த நபர் ஜமாஅத்திலிருந்து பிரிந்து சென்று விடுவாரோ அவர் ஒரு வகையில் நெருப்பில் வீசப்பட்டு விட்டார். (திர்மிதி கிதாபுல் ஃபிதன்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது ஜமாஅத்திற்கு இதே போதனையையே வழங்கியுள்ளார்கள்.

அன்னார் ( அலை) கூறுகின்றார்கள்:

ஸஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) மீது எத்தகைய அருள் இருந்தது! அவர்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவதில் எந்த அளவிற்கு தங்களை மாய்த்துக் கொண்ட சமுதாயமாக இருந்தார்கள்!

ஒரு சமுதாயம் கட்டுப்படுதலுக்கான வழிமுறைகளை மேற்கொள்ளாத வரை ஒரு சமுதாயம் சமுதாயம் என்று அழைக்கப்பட முடியாது. மேலும் அவர்களிடத்தில் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் ஆன்மாவை ஊட்டப்படவும் முடியாது. கருத்து வேறுபாடுகள் உருவாகி, பிரிவினையும் இருந்து வரும் என்றால், பின்னர் புரிந்து கொள்ளுங்கள்! இவை வீழ்ச்சி மற்றும் பின்னடைவின் அடையாளங்கள் ஆகும். ...

ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் கரம்

இருக்கின்றது. அதில் உள்ள ரகசியம் இதுவே ஆகும். அல்லாஹ் ஏகத்துவத்தை விரும்புகின்றான். மேலும் கீழ்ப்படிதலை மேற்கொள்ளாத வரை இந்த ஒற்றுமை நிலை பெற்றிருக்க முடியாது. சுருக்கமாக, ஸஹாபிகளை போன்ற நிலையும், ஒற்றுமையும் தற்போதும் அவசியமாகும்.

ஏனெனில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கரங்களால் தயாராகியுள்ள இந்த ஜமாஅத்தை, அல்லாஹ் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தயார் செய்த அந்த ஜமாஅத்துடன் இணைத்திருக்கின்றான்.

ஜமாஅத்தின் முன்னேற்றம் என்பது இத்தகைய மக்களின் முன்மாதிரிகளின் மூலமாகவே நிகழ முடியும். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகின்ற மற்றும் ஸஹாபிகளின் ஜமாஅத்துடன் இணைவதற்கு விருப்பம் கொண்டுள்ள நீங்கள் உங்களிடத்தில் ஸஹாபிகளின் வடிவத்தையும், தன்மையையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

கட்டுப்படுதல் என்றால் அப்படிப்பட்ட கட்டுப்படுதல் (அதாவது ஸஹாபிகளிடம் காணப்பட்ட) இருக்க வேண்டும்; பரஸ்பரம் அன்பு மற்றும் சகோதரத்துவம் என்றாலும் அப்படிப்பட்ட நிலை (அதாவது ஸஹாபிகளிடம் காணப்பட்ட நிலை) இருக்க வேண்டும்.

சுருக்கமாக, எல்லா வடிவத்திலும், எல்லா நிலையிலும் நீங்கள் ஸஹாபிகளின் வடிவத்தையே மேற்கொள்ள வேண்டும்.

(தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை), தொகுதி 3 பக்கம் 317 - 319)

இதேபோன்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும், பூமியில் உள்ள பல்வேறு இடங்களிலும் வசித்து வருகின்ற நல்ல ஆன்மாக்களையும், எல்லா நல்லியல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகின்றான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். இதற்காகவே நான் உலகில் அனுப்பப்பட்டுள்ளேன்.

(அல் வஸிய்யத் ரூஹானி ஹஸாயின் தொகுதி, 20 பக்கம் 306 -307)

உலகம் தன்னை படைத்தவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் ஒன்றுகூட வேண்டும். இதுவே எமது நோக்கமும் வாதமும் ஆகும்.

அல்லாஹ்வின் அருளால் இன்று ஒற்றுமை என்பது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய ஜமாஅத்தின் சிறப்பம்சமாக மட்டுமே இருக்கின்றது. (அஹ்மதி அல்லாத) மற்ற (முஸ்லிம்கள்) அனைவரும் பிரிவினைக்கு இரையாகியுள்ளனர். அல்லாஹ்வின் அருட்கொடைக்கு மதிப்பளிக்காத வரை அவர்கள் அனைவரும் அந்நிலையிலேயே இருப்பர். எனவே நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். அதாவது நாம் கிலாஃபத்தின் அருளால் முன்னேற்றத்தின் பாதைகளில் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கின்றோம். மேலும், முழு உலகிலும் இஸ்லாத்தின் கொடியை உயர்த்திக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத் ஒரு கரத்தின் கீழ் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். ஆக, அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள எம்.டி.ஏ எனும் அருட்கொடையானது ஜமாஅத்தில் ஒற்றுமையையும் கிலாஃபத்துடன் ஒரு தொடர்பையும் மிக அதிகமாக ஏற்படுத்திவிட்டது.

நாம் பார்க்கின்றோம். எம்.டி.ஏ-வில் காலத்தின் கலீஃபாவுடைய ஜுமுஆ பேருரைகளும், சொற்பொழிவுகளும் ஒளிபரப்பாகும் என்றால், பின்னர் முழு உலகிலும் பரவியிருக்கின்ற ஒவ்வொரு நாட்டையும், சமுதாயத்தையும், எல்லா நிறத்தையும், இனத்தையும் சார்ந்த அஹ்மதிகள் மிகவும் நேசத்துடனும், பற்றுடனும் அவற்றை கேட்கின்றனர். மேலும் தங்களது ஈமானிலும், உறுதியிலும் உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்கின்றனர். மேலும் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டில் முன்னேற்றம் கண்டு கொண்டே செல்கின்றனர். எனவே இஸ்லாமிய போதனைகளில் சமுதாய ஒற்றுமைக்கான முக்கியத்துவம் மற்றும் பரக்கத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இன்று அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நிழலில் அஹ்மதிய்யா ஜமாஅத் அவற்றின் செயல் வடிவமாக உள்ளது.

இது எனது துஆ ஆகும். அதாவது அல்லாஹ் அனைத்து வாசகர்களுக்கும் இதற்கான நற்பேறை வழங்குவானாக! மேலும் அவர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தியவாறு இந்த அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளட்டுமாக! அல்லாஹ் உங்களுடன் இருப்பானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

* * * * *

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## பதர் வாரப் பத்திரிகை காதியான் - சிறப்பிதழ்



| | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | தலையங்கம் | 5 |
| 2 | திருக்குர்ஆன் கட்டளைகள் | 7 |
| 3 | நபிமொழிகள் | 8 |
| 4 | ஹஜ்ஜத்துல் விதா பேருரை | 9 |
| 5 | உலக அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக கலீஃபாக்களின் மேற்கோள்கள் | 10 |
| 6 | மார்க்க உலகில் அமைதியின் தூதுவர் | 13 |
| 7 | சமுதாய ஒற்றுமை தொடர்பான ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் பொன்னான வழிகாட்டல்கள் | 16 |
| 8 | இஸ்லாத்தில் நீதிக்கான போதனைகள் | 23 |



## தலையங்கம்

### சமுதாய ஒற்றுமையை நாம் எவ்வாறு பெற முடியும் ?

நேசத்திற்குரிய நாடான பாரதம் பல்வேறு மதங்கள், சமுதாயங்கள், நிறங்கள் மற்றும் இனங்களைக் கொண்ட மக்களின் வசிப்பிடமாக இருக்கின்றது. கால ஓட்டத்தில் அதன் சமுதாய உரிமைப்பாட்டின் சூழலில் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றது. இதில் பல்வேறு மதங்களின் பங்கு அந்த அளவு இல்லை என்றபோதிலும், அரசியலை வெற்றிகரமாக நடத்துவதற்காக மதங்கள் தவறாகவும், தரக்குறைவாகவும் பயன்படுத்தப்படுவது அதற்கு காரணமாக உள்ளது. இதில் மதங்களுடன் தொடர்பு வைத்திருக்கின்ற அரசியல்வாதிகளின் பங்கும் இருக்கின்றது. எந்த அரசியல்வாதிகளுடைய தொடர்பு இந்து மதத்துடன் இருக்கின்றதோ அவர்கள் தமது இந்து வாக்காளர்கள் மத்தியில் மலிவான புகழை பெறுவதற்காக இந்து மதம் அபாயத்தில் இருக்கின்றது என்று கூறி மாற்று மதங்களைச் சார்ந்த மக்களுடன் சண்டை போட வைக்கின்றனர். அவ்வாறு செய்து தங்களது அரசியலை வெற்றிகரமாக நடத்துவதற்கு முயற்சி செய்கின்றனர். இந்த வெற்றியானது அவர்களுக்கு இந்த சமயத்தில் மிகவும் அருகில் தென்படுகின்றது. ஹிந்து மதத்தைச் சார்ந்த மதத் தலைவர்கள் அத்தகைய அரசியல்வாதிகளுக்கு ஒத்து ஊதக் கூடியவர்களாகவும், அவர்களுக்கு அதிகமாக உதவி செய்பவர்களாகவும் ஆகிக்கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு ஆகும் போது அத்துடன் அதிகம் அதிகமாக தமது மார்க்கத்தைச் சார்ந்த மக்களையும் அதில் பங்கு பெற வைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். அதற்காக தீவிரவாதத்தை துணைக்கு அழைக்க வேண்டியது வந்தாலும் சரியே.

இதே நிலைதான் முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் இருக்கின்றது. அவர்களும் தமது அரசியல் வெற்றிக்காக முஸ்லிம் பொதுமக்களிடத்தில் இஸ்லாம் அபாயத்தில் இருக்கின்றது என்று கூறி அவர்களையும் தமது இந்த இழிவான நோக்கத்தில் பங்கு பெற வைக்கின்றனர். தமது நோக்கத்தை வலுப்படுத்துவதற்காக முஸ்லிம் ஆலிம்களின் ஆதரவையும் அவர்கள் பெறுகின்றனர். அதன் மூலமாக தமது அரசியல் இலாபங்களை மேலும் பிராகசிக்க செய்ய அவர்கள் இதனை செய்கின்றனர்.ஏனைய மதங்கள் மற்றும் சமுதாயங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் நிலையும் இவ்வாறுதான் உள்ளது.

இந்தியாவில் மட்டுமல்ல; மாறாக அண்டை நாடுகளிலும் கூட தமது அரசியல் இலாபங்களை பிரகாசிக்கச் செய்வதற்காக மதத்தின் போர்வையைப் போர்த்தியவாறு இந்த இழிவான செயலில் முழுமையான அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. பாகிஸ்தான் இந்த விவகாரத்தில் இந்தியாவை விட முன்னிலை வகிக்கின்றது. அங்கு அரசியல்வாதிகள் மௌலவிகளின் உதவியின் மூலமாக தமது அரசியல் வியாபாரங்களில் கடந்த சில பத்தாண்டுகளில் செய்த முயற்சிகளால் மிகவும் ஜொலிக்கின்றனர். அதில் முழுமையாக முன்னேறி இருக்கின்றனர். ஆனால், இறுதியில் தற்போது பாகிஸ்தானின் நிலையானது எல்லா நாடுகளை விடவும் முன்னிலையில் இருக்கின்றது. அங்கு அரசியலும் நிலை பெற முடியவில்லை. மதத்தின் அசல் தன்மையும் நிலை நிறுத்தப்பட முடியவில்லை. அங்கு பொருளாதாரத்தையும் அவர்களால் நிலைநிறுத்த முடியவில்லை. சமுதாய தொடர்புகளையும் நிலை நிறுத்த முடியவில்லை. மதம், அரசியல், பொருளாதார விஷயங்கள் மற்றும் வாழ்வாதாரம் ஆகிய அனைத்துமே அங்கு சிதறுண்டு போய்விட்டன.

தற்போது பாகிஸ்தானுக்கு பிறகு இந்தியாவிலும் இதே நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், நாளுக்கு நாள் சிக்கல்கள் மோசமாகிக் கொண்டே இருக்கின்றன. பாகிஸ்தான் அரசியலில் மார்க்கத் தீவிரவாதத்தை புகுத்த ஆரம்பித்தபோது அதன் முன்னால் தற்போதுள்ள காலகட்டத்தின் எந்தவொரு முன்மாதிரியும் இருக்கவில்லை. அதாவது அதிலிருந்துப் படிப்பினை பெறத் தக்க எந்த ஒரு முன்மாதிரியும் பாகிஸ்தானிற்கு முன்னால் இருக்கவில்லை. அவ்வாறிருந்திருந்தால் அவர்கள் அதிலிருந்து விலகியிருக்கக் கூடும். ஆனால் இந்தியாவிற்கு முன்னால் பாகிஸ்தானுடைய படிப்பினை பெறத் தக்க முன்மாதிரி இருக்கின்றது. இது மட்டுமல்ல இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷிற்கு முன்னால் ஐரோப்பாவின் கடந்த கால வரலாறும் இருக்கின்றது. 12வது மற்றும் 13வது நூற்றாண்டின் அந்த அபாயகரமான இருள் நிறைந்த காலகட்டம் ஐரோப்பாவில் வந்தது.

மேலும் அந்தக் காலகட்டத்தில் இந்த மார்க்கத் தீவிரவாதிகள் தங்களது இழிவான உலகியல் நோக்கங்களை முழுமை செய்து கொள்வதற்காக அப்பாவி மக்கள் மீது கொடுமை இழைத்தனர்; மேலும், மேதைகள் மற்றும் அறிவியல் அறிஞர்களுக்கு வெட்கக் கேடான தண்டனைகளை வழங்கப்பட்டன. கலிலியோ மற்றும் அவரைப் போன்ற இன்னும் பல அறிஞர்கள் மார்க்க குத்தகைக்காரர்களின் நீதிமன்றங்களில் நிறுத்தப்பட்டனர்.

ஆனால் ஐரோப்பா மதத்தையும், அரசியலையும்

தனித்தனியாக பிரித்து மதசார்பற்ற சிந்தனைகளின்படி செயல்ட துவங்கியபோது, அங்கோ முன்னேற்றத்திற்கான அந்தக் காலகட்டம் ஆரம்பமானது. இன்றும் ஐரோப்பிய நாடுகள் இந்திய துணைக் கண்டம் மற்றும் ஆசியாவின் பல நாடுகளை விட முன்னேறியுள்ளது. இந்தக் காலகட்டமோ ஐரோப்பாவின் மறுமலர்ச்சியின் காலகட்டம் என்று கூறப்படுகிறது. அந்தோ! பாரதம், பாகிஸ்தான் மற்றும் வங்க தேசத்தின் அரசியல்வாதிகளும், மார்க்கத் தலைவர்களும் ஐரோப்பாவின் இந்த வரலாற்றிலிருந்து பாடம் படிக்க வேண்டுமே! மீண்டும் அந்த கசப்பான வரலாறை தொடரும்படி செய்து விடக்கூடாது.ஏனெனில், அதனால் நூற்றாண்டுகளாக ஒரு சமுதாயம் துன்பங்களை சகிக்க நேரிட்டது.

ஆக ஒரு சமுதாயம் நூற்றாண்டுகளாக துன்பத்தை சகித்து வந்தது. அத்தகைய ஒரு கசப்பான அனுபவத்தை மீண்டும் அவர்கள் வர விடக்கூடாது. ஆனால் விஷயம் இத்துடன் முற்றுப் பெற்றுவிடவில்லை.

ஐரோப்பாவின் இந்த உலகியல் முன்னேற்றத்தில் அது மார்க்கத்தின் சாதகமான அந்தப் பங்கைக் கூட புறக்கணித்தவாறு மார்க்கம் முற்றிலுமாக கைவிடப்பட்டு விட்டது. அதன் விளைவாக அங்கு ஒழுக்கமின்மை உருவாகிவிட்டது. சுதந்திரம் என்ற பெயரில் வெட்கம் மற்றும் நாணத்தை புறக்கணிக்கத்து விட்டனர். மேலும் மறுமலர்ச்சியின் அந்தக் காலகட்டத்திற்குப் பிறகு மீண்டும் ஆன்மிக வறட்டுத் தன்மையின் பக்கம் அது முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற முன்னேறும் நாடுகள் ஐரோப்பாவின் இந்த வரலாற்றிலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியும். முதலாவதாக, அவர்கள் உலகியல் வணங்கிகளாக இருக்கும் அனைத்து மார்க்கத் தலைவர்களுக்கும் பிரியா விடை கொடுத்து விட வேண்டும். அடுத்து, மார்க்கத்தின் அந்த மகத்தான நோக்கத்தை அதாவது எந்த நோக்கத்தால் மனிதனுக்கு இறைவனுடம் தொடர்பு நிலைபெறுமோ அதனைப் பெற வேண்டும். இதன் விளைவாக என்னவாக இருக்குமென்றால், உலகியல் முன்னேற்றமும் தனது இடத்தில் நிலைபெற்றிருக்கும்; மேலும் உண்மையில் ஆன்மாவின் நிம்மதிக்கு ஒரு பெரும் வழிமுறையாக இருக்கக்கூடிய மார்க்க முன்னேற்றமும் அதன் மூலமாக கிடைத்து விடும். இதுதான் நாம் சமுதாய ஒருமைப்பாட்டை பெறுவதற்கான அருமருந்தாக இருக்கின்றது.

இந்தியா அல்லது ஏனைய வளரும் நாடுகள் தங்களுக்குள் பரஸ்பரம் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டின் சூழலை நிலைபெறச் செய்யாத வரை அவர்கள் முன்னேற்றத்தை பெற முடியாது. அடுத்து அந்த ஒருமித்த கருத்தும் மற்றும் ஒற்றுமையும் அந்த நாடுகளிலிருந்து வெளியேறி ஏனைய அண்டை நாடுகள் வரையிலும் அது பரவி விடும். எந்த அளவிற்கு என்றால் முழு உலகமும் ஒற்றுமை, ஒருமித்தக் கருத்து மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் ஒளியால் ஒளி பெற்று விடும். இந்த மகத்தான பணியானது சுயநலத்தைப் பெற விரும்புகின்ற அரசியல்வாதிகள் உலக நோக்கங்களுக்காக மதத்தை பயன்படுத்தும்போது நடைபெற முடியாது. இன்னும் கூறப்போனால், முழுக்க முழுக்க எவ்வித பலனையும் எதிர்பார்க்காத அன்பு மட்டுமே இவ்விஷயத்தை வளர்ச்சி அடைய செய்ய முடியும். இந்த சுயநலம் பார்க்காத அன்பானது அதாவது எவ்வித பலனையும் எதிர்பார்க்காத அந்த அன்பானது முழுக்க முழுக்க ஆன்மிகத்தின் மூலமாக மட்டுமே நமக்கு கிடைக்க முடியும். இதற்காக நமது மார்க்கத்தில் எண்ணற்ற அறிவுச் செல்வங்கள் இருக்கின்றன. தேவை என்னவென்றால், ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த அறிஞர்களும் அன்பு மற்றும் ஒருமைப்பாடு தொடர்பான தங்களது மார்க்கத்தின் புனித நூலிலிருந்து எடுத்து அதனை பொதுமக்களுக்கு முன்னால் சமர்ப்பிக்க வேண்டும்.

ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) இவ்வாறு கூறுகின்றார்கள்:

اَلْخَلْقُ عِيَالُ اللهِ فَاَحَبُّ الْخَلْقِ اِلَى اللهِ مَنْ اَحْسَنَ اِلٰى عِيَالِهٖ

(பைஹக்கீ ஃபீ ஷஅபுல் ஈமான்) (மிஷ்காத் தொகுப்பு பாடம், அஸ்ஸஃப்கத்திஹி வர் ரஹ்மஃ அலல் கல்க், ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண் 712)

நிறைவாக, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் தூய மேற்கோளுடன் இந்த உரையாடல் நிறைவு செய்யப்படுகின்றது. அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நான் முழுமையான கண்ணியத்துடனும், பணிவுடனும், கண்ணியமிக்க முஸ்லிம் ஆலிம்களுக்கும், கிறிஸ்துவ அறிஞர்களுக்கும், இந்துமத பண்டிதர்களுக்கும் ஆரியர்களுக்கும் இந்த பிரசுரத்தை அனுப்புகின்றேன்; மேலும் தகவல் தெரிவிக்கின்றேன். அதாவது நான் ஒழுக்கம், கொள்கை மற்றும் ஈமானிய பலவீனங்கள் மற்றும் தவறுகளின் சீர்திருத்தத்திற்காக உலகில் அனுப்பப்பட்டுள்ளேன்.

மார்க்கத்திற்காக வாள் ஏந்துவதற்கும், மதத்தின் பெயரால் இறைவனுடைய அடியார்களை கொலை செய்வதற்கும் நான் எதிராக இருக்கின்றேன்.

நான் இந்த விஷயத்தை அனைத்து முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், இந்துக்களுக்கும், ஆரியர்களுக்கும் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதாவது உலகில் எனக்கு எவரும் பகைவர் இல்லை; கருணைமிக்க தாய் தனது குழந்தைகளை நேசிப்பது போன்று இன்னும் சொல்வதென்றால் அதைவிட அதிகமாக நான் மனித இனத்தை நேசிக்கின்றேன்.,, மனிதர்கள் மீது அனுதாப கொள்வது எனது கடமையாகும். பொய், இணை வைத்தல், அநீதியிழைத்தல் எல்லாவிதமான தீய செயல்கள், அநீதி, தீய ஒழுக்கம் ஆகியவற்றிலிருந்து விலகியிருப்பது எனது கொள்கையாகும். (அர்பயீன் பக்கம் 1-2)

தமிழாக்கம்

மௌலவி ரஃபீக் அஹ்மது

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## திருக்குர்ஆன் கட்டளைகள்

### அல்லாஹ் மனிதர்களுடன் நீதியுடன் நடப்பதற்கும் நன்மை செய்வதற்கும் மேலும் உறவினர்களுடன் நடந்து கொள்வதை போன்று நடப்பதற்கும் கட்டளை வழங்குகின்றான்

يٰۤاَيُّهَا النَّاسُ اِنَّا خَلَقْنٰكُمْ مِّنْ ذَكَرٍ وَّاُنْثٰى
وَجَعَلْنٰكُمْ شُعُوْبًا وَّقَبَآئِلَ لِتَعَارَفُوْا
اِنَّ اَكْرَمَكُمْ عِنْدَ اللّٰهِ اَتْقٰكُمْ ۔
اِنَّ اللّٰهَ عَلِيْمٌ خَبِيْرٌ ○

மக்களே! நாம் உங்களை ஆண் பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களை கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உங்களுள் கண்ணியமிக்கவர் உங்களுள் இறையச்சம் மிக்கவரே ஆவார். நிச்சயமாக அல்லாஹ் எல்லாம் அறிந்தவனும், எல்லாம் உணர்ந்தவனுமாவான். (அல் ஹுஜுராத்: 14)

يٰۤاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ
وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً ۚ
وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ ۔
اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا ○

மக்களே! உங்களது இறைவனுக்கு அஞ்சுங்கள். உங்களைத் தனித்த ஒன்றிலிருந்து படைத்து அ(தன் இனத்)திலிருந்தே, அதன் இணையையும் படைத்து அவ்விரண்டிலிருந்தும் அநேக ஆண்களையும், பெண்களையும் படைத்து உலகில் பரவச் செய்த உங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள்.(அந்நிஸா:2)

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا يَسْخَرْ قَوْمٌ مِّنْ قَوْمٍ
عَسٰۤى اَنْ يَّكُوْنُوْا خَيْرًا مِّنْهُمْ وَلَا نِسَآءٌ مِّنْ نِّسَآءٍ
عَسٰۤى اَنْ يَّكُنَّ خَيْرًا مِّنْهُنَّ ۚ
وَلَا تَلْمِزُوْۤا اَنْفُسَكُمْ وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ
بِئْسَ الِاسْمُ الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ ۚ
وَمَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ○

நம்பிக்கை கொண்டவர்களே! ஒரு சமுதாயத்தினர் இன்னொரு சமுதாயத்தினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்.(ஒரு கூட்டத்தைச் சேர்ந்த) பெண்கள் (மற்றொரு கூட்டத்தைச் சேர்ந்த) பெண்களையும் (ஏளனம் செய்ய வேண்டாம்). ஒருவேளை அவர்கள் இவர்களை விடச் சிறந்தவர்களாக இருக்கலாம்.நீங்கள் உங்கள் மக்களையே பழித்துரைக்காதீர்கள். ஒருவரையொருவர் (தீய) பட்டப் பெயர் சூட்டி அழைக்காதீர்கள்.ஏனெனில் நம்பிக்கை கொண்ட பின்னர் கெட்ட பெயர் எடுப்பது மிகவும் தீய ஒன்றாகும். கழிவிரக்கம் கொள்ளாதவர்கள் அநீதி இழைப்பவர்களாவார்கள். (அல் ஹுஜுராத்:12)

لَا يَنْهٰكُمُ اللّٰهُ عَنِ الَّذِيْنَ لَمْ يُقَاتِلُوْكُمْ فِى الدِّيْنِ
وَلَمْ يُخْرِجُوْكُمْ مِّنْ دِيَارِكُمْ اَنْ تَبَرُّوْهُمْ
وَتُقْسِطُوْۤا اِلَيْهِمْ ۔ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُقْسِطِيْنَ ○

உங்கள் மார்க்கம் தொடர்பாக உங்களுடன் போர் செய்யாதவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான்.( அல் மும்தஹின்:09)

قُلْ يٰۤاَهْلَ الْكِتٰبِ تَعَالَوْا اِلٰى كَلِمَةٍ سَوَآءٍۢ بَيْنَنَا وَبَيْنَكُمْ
اَلَّا نَعْبُدَ اِلَّا اللّٰهَ وَلَا نُشْرِكَ بِهٖ شَيْئًا وَّلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا
اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ ۔ فَاِنْ تَوَلَّوْا فَقُوْلُوا اشْهَدُوْا بِاَنَّا مُسْلِمُوْنَ ○

நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். அதாவது நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டுவிட்டு நம்முள் சிலர், வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ள மாட்டோம் ;ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால் நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாகயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள். (ஆலிஇம்ரான்:65)

اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآئِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ ۚ
يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ ○

நிச்சயமாக அல்லாஹ் ( நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும் உறவினர்களுக்கு கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளையிடுகின்றான். (எல்லா வகை) வெட்கக் கேட்டிலிருந்தும் வெறுக்கத்தக்கவற்றிலிருந்தும் ,வரம்பு மீறல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான்.
(அந் நஹல்: 91)

* * * * *

National Watch Company

Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

**நபிமொழிகள்**

**அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பமாகும். எவர் அல்லாஹ்வின் குடும்பத்துடன் நல்ல முறையில் நடந்து கொள்வாரோ அவரே எல்லாரையும் விட அதிகம் அல்லாஹ்விற்கு நேசத்திற்குரிய நபர் ஆவார்**

عَنْ اَبِیْ نَضْرَةَ حَدَّثَنِیْ مَنْ سَمِعَ خُطْبَةَ رَسُوْلِ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ
وَسَلَّمَ فِیْ وَسْطِ اَیَّامِ التَّشْرِیْق فَقَالَ یَا اَیُّهَا النَّاسُ اَلَا اِنَّ رَبَّکُمْ وَاحِدٌ
وَاِنَّ اَبَاکُمْ وَاحِدٌ ، اَلَا لَا فَضْلَ لِعَرَبِیٍّ عَلٰی عَجَمِیٍّ وَلَا لِعَجَمِیٍّ
عَلٰی عَرَبِیٍّ وَلَا لِاَحْمَرَ عَلٰی اَسْوَدَ وَلَا لِاَسْوَدَ عَلٰی اَحْمَرَ
اِلَّا بِالتَّقْوٰی اَبَلَّغْتُ ؟ قَالُوْا بَلَّغَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ -
ثُمَّ قَالَ : اَیُّ یَوْمٍ هٰذَا ؟ قَالُوْا : یَوْمٌ حَرَامٌ ،
قَالَ : اَیُّ شَهْرٍ هٰذَا ؟ قَالُوْا : شَهْرٌ حَرَامٌ ،
قَالَ : ثُمَّ اَیُّ بَلَدٍ هٰذَا؟ قَالُوْا: بَلَدٌ حَرَامٌ
قَالَ : فَاِنَّ اللهَ قَدْ حَرَّمَ بَیْنَکُمْ دِمَاءَکُمْ وَاَمْوَالَکُمْ ،
قَالَ : وَلَا اَدْرِیْ ،قَالَ اَوْ بَلَدَکُمْ هٰذَا
- اَبَلَّغْتُ ؟ قَالُوْا : بَلَّغَ رَسُوْلُ اللهِ
صَلَّى اللهُ عَلَيهِ وَسَلَّمَ قَالَ : لِیُبَلِّغِ الشَّاهِدُ الْغَائِبَ -

ஹஸ்ரத் அபூ நஸ்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹுஸூர் (ஸல்) அவர்கள் மினாவின் நாட்களில் வழங்கியிருந்த குத்பாவை எந்த நபர் செவியுற்றிருந்தாரோ அந்த நபர் என்னிடம் கூறினார். குத்பாவில் அன்னார் (ஸல்) இவ்வாறு கூறியிருந்தார்கள்: உங்களின் தந்தை ஒருவன் ஆவான் நினைவில் கொள்ளுங்கள். எந்தவோர் அரேபியருக்கும் அரேபியர் அல்லாதவர் மீதும், எந்தவோர் அரேபியர் அல்லாதவருக்கும் ஓர் அரேபியர் மீதும், எந்தவொரு கருப்பருக்கும் வெள்ளையர் மீதும், எந்தவொரு வெள்ளையருக்கும் கருப்பர் மீதும் எந்தவொரு மேன்மையும், சிறப்பும் கிடையாது. எனினும் இறையச்சம் மற்றும் திறமையின் காரணமாக முன்னுரிமையும், சிறப்பும் உள்ளது.

நான் இந்த முக்கியமான தூதுச் செய்தியை உங்களுக்கு எட்ட வைத்து விட்டேனா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, ஆம்! என்று மக்கள் உரத்தக் குரலில் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) இந்த உண்மையான தூதுச் செய்தியை நல்ல முறையில் எட்ட வைத்து விட்டீர்கள் என்று கூறினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: இது என்ன மாதம்? இது என்ன நாள்? என்று கேட்டார்கள். இது ஹஜ்ஜுக்குரிய நாளான மிகவும் புனிதமான நாளாகும். பின்னர் இது என்ன மாதம் என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். இது துல் ஹஜ்ஜாவினுடைய புனிதமான மாதமாகும் என்று மக்கள் கூறினர். பின்னர் இது எந்த நகரம்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். இது மக்கா எனும் புனித நகரமாகும் என்று மக்கள் பதிலளித்தார்கள். அப்போது, எவ்வாறு இந்த நாளும், இந்த மாதமும், இந்த நகரமும் புனிதமானதாக இருக்கின்றதோ அதேபோன்று மக்களின் உயிர்களும், அவர்களின் உடைமைகளும் அவர்களின் கண்ணியமும் புனிதமாக்கப்பட்டுள்ளன என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

நான் இந்த முக்கியமான தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டேனா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் எல்லாவற்றையும் எட்ட வைத்து விட்டீர்கள் என்று மக்கள் கூறினர். அப்போது, எவர் இங்கு இருக்கின்றாரோ அவர் இங்கு இல்லாதவருக்கு இந்த தூதுச் செய்தியை எட்ட வைத்து விட வேண்டும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஐந்து பக்கம் 411 சான்று ஹதீக்கத்துல் ஸாலிஹீன் ஹதீஸ் நூல் ஹதீஸ் 704)

عَنْ ابْنِ عُمَرَ رَضِیَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ رَسُوْلُ اللهِ
صَلَّى اللهُ عَلَيهِ وَسَلَّم : لَا تَحَاسَدُوْا وَلَا تَنَاجَشُوْا
وَلَا تَبَاغَضُوْا وَلَا تَدَابَرُوْا وَلَا یَبِعْ بَعْضُکُمْ
عَلٰی بَیْعِ بَعْضٍ ،وَ کُوْنُوْا عِبَادَ اللهِ اِخْوَانًا -
اَلْمُسْلِمُ اَخُو الْمُسْلِمِ : لَا یَظْلِمُهٗ وَلَا یَحْقِرُهٗ
وَلَا یَخْذُلُهٗ التَّقْوٰی هٰهُنَا -وَیُشِیْرُ اِلٰی صَدْرِهٖ ثَلَاثَ مَرَّاتٍ
بِحَسْبِ امْرِیءٍ مِّنَ الشَّرِّ اَنْ یَحْقِرَ اَخَاهُ الْمُسْلِمَ کُلُّ الْمُسْلِمِ
عَلَى الْمُسْلِمِ حَرَامٌ دَمُهٗ وَمَالُهٗ وَعِرْضُهٗ -

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவர் மற்றவர் மீது பொறாமை கொள்ளாதீர்கள்; ஒருவர் மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக விலையை உயர்த்தாதீர்கள். ஒருவர் மற்றவர் மீது பகைமை கொள்ளாதீர்கள். ஒருவர் மற்றவரிடம் இருந்து முகம் திருப்பிக் கொள்ளாதீர்கள். அதாவது தொடர்பின்மையை மேற்கொள்ளாதீர்கள். ஒருவர் மற்றவருக்கு போட்டியாக வியாபாரம் செய்யாதீர்கள். இன்னும் கூறப்போனால் அல்லாஹ்வின் அடியார்களாகவும், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் சகோதரர்களாகவும் திகழ்ந்து விடுங்கள். முஸ்லிம் தனது சகோதரர் மீது அநீதி இழைப்பதில்லை. அவரை ஏளனம் செய்வதில்லை. அவரை ஏளனப்படுத்துவதுமில்லை அல்லது அவரை இழிவிற்குள்ளாக்குவதுமில்லை.

அன்னார் (ஸல்) தமது இதயத்தை சுட்டிக்காட்டியவாறு கூறினார்கள். தக்வா இங்கே உள்ளது. இந்த சொற்களை அன்னார் (ஸல்) மூன்று முறை கூறினார்கள். பின்னர் கூறினார்கள்; மனிதனின் துர்பாக்கியத்திற்கு இந்த விஷயமே போதுமானதாகும். அதாவது அவர் தனது முஸ்லிம் சகோதரர்களை ஏளனத்துடன் பார்ப்பதே அவரது துர்பாக்கியத்திற்கு போதுமானதாகும். ஒவ்வொரு முஸ்லிமுடைய இரத்தமும், செல்வமும், கண்ணியமும் மற்றொரு முஸ்லிமின் மீது ஹராம் ஆகும். மேலும் அவருக்கு அது கண்ணியத்திற்குரியதாகும்.

* * * * *

## ஹஜ்ஜத்துல் விதாவின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

## ஆற்றிய சொற்பொழிவு

ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்கு சென்று ஹஜ் செய்தார்கள். அப்போது அவர்களுக்கு கீழ்க் காணும் திருக்குர்ஆனின் பிரபலமான வசனம் அருளப்பட்டது.

இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் உங்களுக்கு என் அருளை நிறைவு செய்துள்ளேன். மேலும் உங்களுக்கு மார்க்கமாக இஸ்லாத்தை தேர்ந்தெடுத்துள்ளேன்.

அதாவது இன்று நான் உங்களுக்காக உங்களின் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன். மேலும் இறைவனிடமிருந்து அடியார்களுக்கு எத்தனை ஆன்மீக அருட்கொடைகள் இறங்க முடியுமோ அத்தனை ஆன்மீக அருட்கொடைகளையும் நான் உமது சமுதாயத்திற்கு வழங்கியுள்ளேன். மேலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுதலே உங்கள் மார்க்கத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று நான் தீர்மானித்து விட்டேன். (5:4)

ஹஜ் செய்வதற்காக மக்கள் திரண்டிருந்த போது அவர்கள் எல்லாருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்தலிஃபா என்ற திடலில் இந்த வசனத்தை உரத்தக் குரலில் ஓதிக் காட்டினார்கள். அங்கிருந்து திரும்பியதும் ஹஜ்ஜின் விதிமுறைகளுக்கேற்ப அவர்கள் மினா திடலில் தங்கினார்கள். அது துல்ஹஜ் மாதத்தின் பதினொன்றாம் நாளாகும். அங்கு திரண்டிருந்த முஸ்லிம்களிடையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விடைபெறும் சொற்பொழிவு என வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. அப்போது அவர்கள் கூறினார்கள்:

மக்களே! காது கொடுத்து கேளுங்கள்! இப்போது பேசுவது போன்று இந்த வருடத்திற்கு பிறகு இந்தத் திடலில் இனி ஒரு முறை நான் பேசுவேனா என்பது எனக்குத் தெரியாது. உங்கள் உயிர்களும், உங்கள் உடமைகளும், இறுதி நாள் வரை ஒருவருக்கொருவர் தாக்கி கொள்வதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று இறைவன் கட்டளையிட்டுள்ளான். பரம்பரை சொத்தில் ஒவ்வொருவருக்கும் உரிய பங்கை இறைவன் விதித்துள்ளான். ஒரு வாரிசின் பங்கை பாதிக்கும் எந்த மரண சாசனமும் கூடாது. ஒரு குழந்தை எவருக்கு பிறந்ததோ அவருடைய குழந்தையாகவே அது கருதப்படும். இதற்கு மாற்றமாக குழந்தையின் பெற்றோர் குறித்து பிரச்சனையை கிளப்புபவர் இஸ்லாத்தின் சட்டங்களின்படி தண்டனைக்குரியவர் ஆவார். ஒருவர் இன்னொருவரின் தந்தையை பொய்யாக தனது தந்தை என்று கூறினாலோ அல்லது ஒருவரை தம்முடைய எஜமானன் என பொய்யாக கூறினாலோ அவர் இறைவனின் சாபத்திற்கும், அவனது வானவர்களின் சாபத்திற்கும் மக்களின் சாபத்திற்கும் ஆளாவார்.

மக்களே ! உங்கள் மனைவிகள் மீது உங்களுக்கு சில உரிமைகள் இருப்பது போன்று உங்கள் மீதும் உங்கள் மனைவிகளுக்கு சில உரிமைகள் இருக்கின்றன. அவர்கள் மீது உங்களுக்குள்ள உரிமையாவது அவர்கள் உங்களுடன் கற்புள்ளவர்களாக வாழ்ந்து வர வேண்டும். மேலும் அவர்கள் தங்கள் கணவர்களிடம் சமுதாயத்தில் அவமரியாதை ஏற்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது. அவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால் முறைப்படி பரிசீலனை செய்து நடுவர்களின் தீர்ப்பிற்கு பிறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று திருக்குர்ஆன் கூறுவது போன்று நீங்கள் அவர்களுக்கு தண்டனை வழங்கலாம். ஆனால் அது கடினமான தண்டனையாக இருக்கக் கூடாது.

ஆனால் அவர்கள் குடும்ப கௌரவத்தையும், கணவன்மார்களின் கௌரவத்தையும் கெடுக்கும் விதத்தில் நடந்து கொள்ளவில்லை என்றால், நீங்கள் உங்கள் தகுதிக்கேற்ப அவர்களின் உணவு, உடை ஆகியவற்றிற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். நீங்கள் எப்போதும் உங்கள் மனைவிகளுடன் மென்மையாகவும், நல்ல முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அவர்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை இறைவன் உங்களிடம் ஒப்படைத்துள்ளான். பெண்கள் பலவீனமானவர்கள்; அவர்கள் தங்கள் உரிமைகளை தங்களால் பாதுகாக்க முடியாதவர்கள்; நீங்கள் அவர்களை மணந்து கொண்ட போது அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பை இறைவன் உங்களிடம் ஒப்படைத்து விட்டான். இறைவனின் கட்டளைகளுக்கு ஏற்ப நீங்கள் அவர்களை உங்கள் வீடுகளுக்கு அழைத்து வந்துள்ளீர்கள். எனவே இறைவன் உங்களிடம் ஒப்படைத்த பொறுப்பை நீங்கள் அலட்சியம் செய்யக்கூடாது. பெண்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதை எப்போதும் உங்கள் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும்.

மக்களே! இப்போது உங்களிடம் சில போர்க் கைதிகள் இருக்கின்றனர். நீங்கள் உண்ணும் உணவையே அவர்களுக்கும் வழங்குங்கள். நீங்கள் அணியும் உடைகளைப் போன்ற உடைகளையே அவர்களுக்கும் வழங்குங்கள். உங்களால் மன்னிக்க முடியாத குற்றங்களை அவர்கள் செய்துவிட்டால் நீங்கள் அவர்களை வேறொருவரிடம் விற்றுவிடுங்கள். ஏனென்றால் அவர்களும் இறைவனால் படைக்கப்பட்ட அடியார்களாக இருப்பதினால் அவர்களைத் துன்புறுத்துவது எவ்வகையிலும் சரியல்ல என்று நான் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றேன்.

மக்களே! நான் கூறுபவற்றையெல்லாம் மிகவும் கவனமாக கேட்டு அதனை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! முஸ்லிம்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் சகோதரராவார். நீங்கள் யாவரும் சமமானவர்களே!. உங்களுள் எவர் எந்த சமுதாயத்தை சார்ந்தவராக இருந்தாலும், எந்தத் தகுதியை பெற்றவராக இருந்தாலும் மனிதன் என்ற வகையில் நீங்கள் யாவரும் சமமானவர்களாவீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனைக் கூறிய போது தமது இரு கைகளையும் உயர்த்தி இரு கைகளில் உள்ள விரல்களை இணைத்துக் காட்டி இரு கைகளும் எவ்வாறு சமமாக இருக்கின்றனவோ அவ்வாறே மனித இனமாகிய நீங்கள் அனைவரும் சமத்துவம் உடையவர்கள் ஆவீர்கள்; ஒருவருக்கொருவர் தமது மேன்மையை பறைசாற்றும் உரிமை உங்களுக்கு இல்லை. நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர் ஆவீர்கள் என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இது என்ன மாதம்? என்று உங்களுக்கு தெரியுமா? இது என்ன நகரம் என்று உங்களுக்கு தெரியுமா? இது என்ன நாள் என்று உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டார்கள். இதற்கு மக்கள் எல்லோரும் ஆம்! தெரியும்!; இது புனிதமான மாதம்; இது புனிதமான நகரம் ; இன்று ஹஜ்ஜுக்குரிய நாள் என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் ...

## உலக அமைதியை நிலைநாட்டுவது தொடர்பான கலீஃபாக்களின் வழிகாட்டல்கள் & ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் புனித 14வது போப் பெனடிக் அவர்களுக்கு எழுதிய மடல்

**இந்தப் பேரழிவு ஆயுதங்கள் வெடித்தால் அநேக எதிர்கால சந்ததியினர் நிரந்தர ஊனத்தை தம் மீது திணித்ததற்காக அவர்கள் நம்மை மன்னிக்க மாட்டார்கள். படைத்தவனின் உரிமை மற்றும் அவனது படைப்பினங்களின் உரிமையின் மீது கவனம் செலுத்துவதற்கு உலகிற்கு இன்னும் நேரம் உள்ளது திருக்குர்ஆன் அன்பு நேசம், அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான போதனை வழுங்குகின்றது. ஒரு தேவாலயம் அல்லது வணக்கஸ்தலத்தின் பாதுகாப்பிற்கான அவசியம் ஏற்பட்டாலோ பின்னர் நாங்கள் தோளோடு தோள் சேர்த்து நிற்பதை நீங்கள் காண்பீர்கள்**

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்தது முதலே உலகத்தை உலகளாவிய அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக கவலை கொண்டுள்ளார்கள். எனவே அதற்காக அன்னார் உலகம் முழுவதும் முன்னேற்றமடைந்த நாடுகளின் பாராளுமன்றங்களில், எதிர்காலத்தில் வரவிருக்கும் அபாயகரமான ஆபத்துகளைக் குறித்து கவலையுடனும், வேதனையுடனும் முழுமையாக தமது ஆன்மீக குரலை உயர்த்திக் கொண்டு வருகின்றார்கள். உலகளாவிய தலைவர்களுக்கு பொன்னான இஸ்லாமிய போதனைகளால் அழகுபடுத்தப்பட்ட கடிதங்களின் மூலமாக கவனமூட்டி வருகின்றார்கள். அதாவது அவர்கள் அனைவரும் வரவிருக்கின்ற பயங்கரமான ஆபத்தான நாட்களை கருத்தில் கொண்டவாறு தமது வட்டத்தில் உலக அமைதிக்கான முயற்சியை வேகப்படுத்த வேண்டும் என்று கவனமூட்டி வருகின்றார்கள்.

அன்னார் பிரிட்டானிய இங்கிலாந்து பார்லிமெண்டிலும், ஜெர்மனியின் மிலிட்டரி தலைமையகத்திலும், கேப்பிட்டல் வாஷிங்டனிலும், டி.சி அமெரிக்காவிலும், ஐரோப்பிய பாராளுமன்றத்திலும், நியூஸிலாந்தின் பார்லிமெண்ட் தேசிய பாராளுமன்றத்திலும் டச் நேஷனல் பார்லிமெண்டிலும் இந்த சொற்பொழிவுகளை ஆற்றினார்கள். மேலும் ஏராளமான அமைதி கருத்தரங்குகளில் தமது அகப்பார்வை மிக்க சொற்பொழிவுகளை ஆற்றினார்கள். மேலும் ஏராளமான உலகளாவிய தலைவர்களுக்கு அமைதியை நிலை நாட்டுதல் பக்கம் கவனமூட்டியவாறு அழைத்தவாறு அவர்களுக்கு கடிதங்களையும் எழுதினார்கள். அதில் இஸ்ரேல் அதிபர், ஈரான் அதிபர், ஐக்கிய நாட்டு சபையின் தலைவர், அமெரிக்க அதிபர், சவுதி அரேபியா மன்னர், சீன அதிபர், பிரிட்டன் பிரதமர், ஜெர்மனியின் சான்ஸ்லர் ஃபிரான்ஸ் அதிபர், ரஷ்ய அதிபர் மற்றும் போப் பெனடிக் 14 ஆகியோருக்கும் எழுதினார்கள்.

இவர்களில் 2011-இல் அன்னார் எந்தக் கடிதத்தை கிறிஸ்தவர்களின் உலகளாவிய ஆன்மீக தலைவராகிய போப் பெனடிக் 14 அவர்களுக்கு அனுப்பினார்களோ அதன் முழுமையான வாசகங்களை பத்ர் இதழ் வாசகர்கள் பயன்பெறும் பொருட்டு சமர்ப்பிக்கின்றோம்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அப்போதிருந்தே உலகளாவிய அழிவிலிருந்து உலகை எச்சரிக்கை செய்து கொண்டு வருகின்றார்கள் என்பதை நீங்கள் இந்தக் கடிதத்தை படித்ததன் மூலமாக உணர்ந்து கொள்ளலாம். அதேநேரம் மற்ற உலகளாவிய தலைவர்கள் இதன் முக்கியத்துவத்தை அறியாதவர்களாக இருந்தனர். மேலும் அதனை காலத்திற்கு பொருத்தமற்ற குரலாக கருதிக் கொண்டு இருந்தனர்.

ஆனால் இன்று நாம் ஹுஸுர் அவர்களுடைய இந்தக் கடிதத்தை மீண்டும் வெளியிடுவதற்கான நற்பேறை பெற்றுக் கொண்டிருக்கின்றோம். எனவே அந்த அழிவை தற்போது மிக அருகில் இருப்பதை உலகம் சுயமே உணர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அவசியம் என்னவென்றால், தற்போது இந்த ஆன்மீக குரலை கேட்க வேண்டும். மேலும் ஒவ்வொரு மனிதனும் குறிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் தத்தமது வட்டத்தில் அந்த அழிவின் அபாயகரமான தாக்கத்திலிருந்து அனைத்து மனிதர்களையும் எச்சரிக்கை செய்ய வேண்டும் மேலும் ஹுஸுர் அவர்களுடைய சொற்களில் இந்த தூதுச் செய்தியை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதாவது மனித குலம் தன்னை படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இந்த ஒரு விஷயம்தான் மனித இனத்தின் பாதுகாப்பிற்கான உத்தரவாதமாகும்.

### ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் புனித 14வது போப் பெனடிக் அவர்களுக்கு எழுதிய மடல்

31, அக்டோபர் - 2011

புனித 14வது போப் பெனடிக் அவர்களே!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையும், அருளும் உங்கள் மீது உண்டாகட்டுமாக! என்பது எனது பிரார்த்தனையாகும்.

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் திருக்குர்ஆனின் செய்தியை புனித 14வது போப் அவர்களுக்கு நான் எட்ட வைக்கின்றேன். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

வேதத்தை உடையவர்களே எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின் பக்கம் வாருங்கள். அதாவது நாம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு வேறு எதனையும் இணை வைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டுவிட்டு நம்மில் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ள மாட்டோம். (திருக்குர்ஆன் 3:65)

இஸ்லாம் இன்று உலகில் மிகவும் பரவலாகவும், உன்னிப்பாகவும் கண்காணிக்கப்படுகிறது. மேலும் தீய குற்றச்சாட்டுகளால் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டு வருகிறது. எப்படியிருப்பினும், இந்தக் குற்றச்சாட்டுகள் இஸ்லாத்தின் போதனைகள் எதையும் படிக்காதவர்களால் சுமத்தப்படுகின்றன. கெடுவாய்ப்பாக சில இஸ்லாமிய அமைப்புகள் தங்களின் சுயநலத்திற்காக மட்டும் இஸ்லாத்தை தவறான வகையில் படம் பிடித்து காட்டியுள்ளன. இதன் காரணமாக முஸ்லிமல்லாத மற்றும் மேற்கத்திய நாடுகளுடைய மக்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் மீது அவநம்பிக்கை அதிகரித்துள்ளது. எந்த அளவிற்கு என்றால், மிகவும் கற்றறிந்த மக்கள் கூட இஸ்லாத்தின் தூய தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறும் அளவுக்கு நிலைமை சென்று விட்டது. மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதும் மனிதநேயத்தை உருவாக்குவதும் தான் ஒவ்வொரு மதத்தின் நோக்கமாக உள்ளது. எந்த மதத்தின் தோற்றுனரும் தன்னைப் பின்பற்றியவர்களை அடுத்தவர் உரிமையை பறிப்பதற்கோ, பிறர் மீது அநீதியிழைப்பதற்கோ போதிக்கவில்லை.

எனவே தவறாக வழிநடத்தப்பட்ட சில குறுகிய எண்ணிக்கையிலான முஸ்லிம்களின் செயல்களை அளவுகோலாக வைத்து, இஸ்லாம் மற்றும் அதன் தோற்றுனர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கக் கூடாது. இஸ்லாம் எல்லா இறைத் தூதர்களையும் மதிக்குமாறு கூறுகின்றது. எனவேதான் புனித பைபிள் அல்லது திருக்குர்ஆனில் கூறப்பட்ட இயேசு கிறிஸ்து (அலை) அவர்கள் உட்பட அனைத்து இறைத் தூதர்கள் மீதும் நம்பிக்கை கொள்வது ஒவ்வொரு முஸ்லிமிற்கும் கட்டாயம் ஆகிறது. நாங்கள் புனித முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பணிவான தொண்டர்கள் ஆவோம். எனவே நாங்கள் புனித முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களால் மிகவும் துயரப்பட்டுள்ளோம். அதற்குப் பகரமாக நாங்கள் அன்னாரின் நற்பண்புகளை உலகிற்கு எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறோம். மேலும் புனித திருக்குர்ஆனின் அழகிய போதனைகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஒருவர் குறிப்பிட்ட ஒரு போதனையை சரியாக பின்பற்றாமல் அதைச் சார்ந்தவர் எனக் கூறினால் அவர்தான் தவறில் உள்ளாரே அன்றி , அந்த போதனைகளில் தவறில்லை.

இஸ்லாம் என்பதன் பொருளே அமைதி, அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவையாகும். திருக்குர்ஆன் முதல் பக்கத்தில் இருந்து கடைசி பக்கம் வரை அன்பு, நேசம், அமைதி நட்புறவு மற்றும் தியாக மனப்பான்மையை போதிக்கின்றது.

எவர் ஒருவர் இறையச்சத்தை கடைபிடிக்கவில்லையோ அவர் அல்லாஹ்வை விட்டு வெகு தூரம் சென்றுவிடுவார். மேலும் இதன் மூலம் இஸ்லாமிய போதனைகளில் இருந்தும் அவர் வெகு தூரம் சென்று விடுவார் என புனித திருக்குர்ஆன் அடிக்கடி கூறுகிறது.

எனவே எவராவது இஸ்லாத்தை தீவிரவாதம் மற்றும் இரத்த வெறி பிடித்த போதனைகளால் நிரம்பிய கொடூரமான மதமாக சித்தரித்தால் அப்படிப்பட்ட சித்தரிப்பிற்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உண்மையான இஸ்லாத்தை பின்பற்றுகிறது. மேலும் அது எல்லாம் வல்ல இறைவனை மகிழ்விப்பதற்காகவே தனது பணியை செய்கின்றது. ஏதாவது கிறிஸ்தவ தேவாலயமோ அல்லது வணக்க ஸ்தலமோ பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் அதற்கு ஏற்பட்டால், அவர்களுடன் தோளோடு தோள் சேர்த்து நாங்கள் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். ஏதாவது ஒரு செய்தி எங்களது பள்ளிவாசலில் இருந்து ஒலிக்கின்றது என்றால் அது அல்லாஹ் மிகப் பெரியவன் என்பதும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத் தூதர் ஆவார்கள் என்பதும் மட்டுமே ஆகும். தங்களை அறிவாளிகள் என்றும் மேதாவிகள் மற்றும் சுதந்திரப் படுத்தப்பட்டவர்கள் என்று காட்டிக் கொள்கின்றவர்கள் மதத் தோற்றுனர்களை கேலியும், கிண்டலும் செய்ய தங்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர். இந்த ஒரு விஷயம்தான் உலகில் அமைதியை கெடுப்பதில் ஒரு பெரும் பங்கு வகிக்கின்றது. சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றால் ஒருவரது சகிப்புத்தன்மையை அதிகப்படுத்த வேண்டும் மேலும் ஒருவரது மனதில் உள்ள எல்லா வெறுப்பின் உணர்வுகளை களைய வேண்டியதும் அவசியமாகும் மற்றவரது இறைத் தூதர்களின் மதிப்பையும், மரியாதையையும் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. இந்த உலகம் அமைதியின்மையையும், கடினத்தையும் கடந்து கொண்டிருக்கின்றது. அன்பு மற்றும் நேசம் கொண்ட சூழலை உருவாக்கினால் இந்த பயம் மற்றும் கவலையை போக்கலாம். சுற்றி இருப்பவரிடம் அன்பு மற்றும் சமாதானத்தின் செய்தியை எட்ட வைத்தால் பெரும் நல்லிணக்கத்துடன் வாழ கற்றுக் கொள்ளலாம். மேலும் இவ்வழியில் மேன்மையை நாம் அறியலாம்.

இன்று உலகில் சிறு அளவிலான போர்கள் மூண்டுள்ளன. மேலும், சில இடங்களில் வல்லரசுகள் அமைதியை கொண்டுவர முயல்வதாக கூறி வருகின்றன. மேலோட்டமாக நமக்கு ஒன்று கூறப்படுகிறது. ஆனால் திரை மறைவில் அவர்களது முன்னுரிமைகளும், கொள்கைகளும் ரகசியமாக நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சூழலில் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. தற்போதுள்ள உலகின் சூழலை நாம் கவலையுடன் கூர்ந்து கவனித்தால் மற்றொரு உலகப் போருக்கான அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டதை கண்டு கொள்ள முடியும். இரண்டாம் உலகப்போருக்குப் பின் சமத்துவ வழியில் நீதியைப் பின்பற்றி இருந்தால், நாம் தற்போதுள்ள உலகின் நிலையை கண்டிருக்க மாட்டோம். இதன் மூலம் மீண்டும் அது போர் என்னும் நெருப்பால் சூழப்பட்டிருக்காது. நிறைய நாடுகள் அணு ஆயுதங்களையும், கடுங்கோபம் மற்றும் காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளதன் விளைவாக பகைமை பெருகிக்கொண்டே செல்கிறது. மேலும் உலகம் அழிவின் உச்சியில் உட்கார்ந்துள்ளது. இந்தப் பேரழிவு ஆயுதங்கள் வெடித்தால் அநேக எதிர்கால சந்ததியினர் நிரந்தர ஊனத்தை தம் மீது திணித்ததற்காக அவர்கள் நம்மை மன்னிக்க மாட்டார்கள். படைத்தவனின் உரிமை மற்றும் அவனது படைப்பினங்களின் உரிமையின் மீது கவனம்

செலுத்துவதற்கு உலகிற்கு இன்னும் நேரம் உள்ளது.

நான் கருதுவது என்னவெனில், தற்போது உலகின் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துவதை விட அதி முக்கியமாக அதனை அழிவிலிருந்து காப்பாற்ற நாம் அவசரமாகவும், அவசியமாகவும் முயற்சி செய்ய வேண்டும். மனிதகுலம் தன்னை படைத்தவனை அறிந்து கொள்வது அவசரத் தேவையாக உள்ளது. ஏனெனில் அவன் ஒருவன் தான் மனித குலம் நிலைத்து நிற்க உத்தரவாதம் தரக்கூடியவன் ஆவான். இல்லையென்றால், இந்த உலகம் சுய அழிவை நோக்கி விரைவாக செல்கிறது. இன்று மனிதன் உண்மையில் அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றி கொள்ள விரும்பினால் மற்றவர்கள் மீது குற்றம் காண முயல்வதை விட அவனிடம் உள்ள ஷைத்தானை அவன் கட்டுப்படுத்த வேண்டும். தனது தீமையை களைவதன் மூலம் ஒருவன் நீதியின் அருமையான உதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். நான் உலகிற்கு அடிக்கடி நினைவூட்டுவது என்னவென்றால், அடுத்தவர் மீது உள்ள இந்த அதிகப்படியான விரோதம் மனித மேன்மையை வலுக்கட்டாயமாக, முழுமையாக பறித்து விடுகிறது.எனவே இது உலகை முழுமையான அழிவை நோக்கி இட்டுச் செல்கிறது.

உலகில் நீங்கள் ஒரு நம்பிக்கைக்குரிய அந்தஸ்தை பெற்றுள்ளீர்கள். எனவே இறைவனால் நிறுவப்பட்டுள்ள இயற்கைச் சமநிலை மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றின் வழியில் தடைகளை ஏற்படுத்தி உலகம் விரைவாக பேரழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனது என்பதை மற்ற உலக மக்களுக்கு தாங்களும் தெரியப்படுத்த வேண்டும் என்று நான் தங்களிடம் வேண்டுகிறேன். இந்த தூதுச் செய்தி கூடுதல் முன்னுரிமையுடன் பரவலாகவும், விரிவாகவும் முன் எப்போதும் இல்லாத வகையில் பரப்பப்பட வேண்டும். உலகில் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் மத நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கான தேவை உள்ளது. மேலும் உலகின் எல்லா மக்களிடமும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான ஆன்மா உருவாக்கப்பட வேண்டும்.

நாம் அனைவரும் நமது பொறுப்புகளை உணர்ந்தவாறு உலகை அமைதி மற்றும் நேசத்தின் பூங்காவாக ஆக்க வேண்டும்; மேலும் நம்மை படைத்த இறைவனை அடையாளம் காட்டிக் கொடுப்பதில் நாம் நமது பங்கை செலுத்த வேண்டும். இதுவே எனது பிரார்த்தனை ஆகும்.

மேலும் அல்லாஹ் நம் அனைவரையும் அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பது எமது பிரார்த்தனையும், விருப்பமும் ஆகும்.

எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய தலைவர்
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்

* * * * *

இந்த மாதமும், இந்த நகரமும், இந்த நாளும் புனிதமானவையாக இருப்பது போன்று இறைவன் ஒவ்வொருவருடைய உயிரையும், உடைமையையும், கண்ணியத்தையும் புனிதமானவையாக ஆக்கியுள்ளான். எவ்வாறு இந்த மாதத்தையும், இந்த நகரத்தையும், இந்த நாளையும் இழிவுபடுத்துவது கூடாதோ, அதே போன்று எந்த மனிதனுடைய உயிருக்கும், உடைமைக்கும், கண்ணியத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துவதும் கூடாது. இந்தக் கட்டளை இன்றைக்கு மட்டுமானதோ (அல்லது) நாளைக்கு மட்டுமானதோ அல்ல; மாறாக இந்தக் கட்டளை நீங்கள் இறைவனை சென்றடையும் நாள் வரைக்கும் உள்ளதாகும்.

நான் இன்று உங்களிடம் கூறுபவற்றை உலகத்தின் எல்லை வரை தெரிவித்து விடுங்கள். ஏனென்றால் இன்று என்னிடமிருந்து இவற்றை நேரடியாக கேட்பவர்களை விட என்னிடமிருந்து கேட்காதவர்கள் இவற்றை மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தலாம் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீரூல் குர்ஆன், பக்கம் 229- 231)

உலக அமைதி மற்றும் சமுதாய ஒற்றுமைக்காக நேர்மறையான நடவடிக்கைகள் தொடர்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மேற்கோள்

அன்னார் (ரஹ்) கூறுகின்றார்கள்:

உலகில் அனைத்து மார்க்கத்தினரும், அவர்கள் இஸ்லாத்தை உண்மையான மார்க்கமாக ஒப்புக் கொண்டாலும் சரி; இல்லையென்றாலும் சரி அவர்கள் இஸ்லாத்தின் இந்த அடிப்படையான வழிமுறையின்படி செயல்பட வேண்டும்; அதாவது உள்ளார்ந்த பிரிவினை வாத மோதல்கள் மற்றும் பிற மதங்களுடனான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக அதிகாரம் மற்றும் பலவந்தத்தை பயன்படுத்துவதற்கு எந்த சூழலிலும் அனுமதி வழங்கக் கூடாது. ஒவ்வொரு நபருக்கும் மார்க்க சுதந்திரத்திற்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் (2) அனைத்து மார்க்கங்களைச் சார்ந்தவர்களும் குறைந்தபட்சம் இஸ்லாத்தின் இந்த வழிமுறையினை பேணி நடப்பது அவசியமாக இருக்க வேண்டும். அதாவது அவர்கள் அனைத்து மார்க்கங்களின் தோற்றுனர்களையும், ஒவ்வொரு மார்க்கத்தின் தலைவர்களுக்கும் கண்ணியம் அளிக்க வேண்டும். (3) இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, மார்க்கத் தலைவர்களுக்கு கண்ணியமளிக்கும் விதிமுறையை ஒரு நாட்டின் சட்டத்தின் மூலமோ அல்லது சர்வதேச சட்டங்களின் மூலமாகவே அமல்படுத்த முடியாது. மார்க்க அவதூறுகளை ஒரு இழிவான செயலாக ஆக்குவதற்காகவும் அதற்கான எண்ணத்தை முற்றிலும் தடுப்பதற்காகவும் இந்த பொதுவான கருத்தின் பக்கம் விழிப்புணர்வு வழங்க வேண்டும். அதாவது அதுபோன்ற பொறுப்பற்ற, அறிவற்ற மற்றும் கீழே செயல்களை அனைவரும் கண்டிக்க வேண்டும். (4) இந்த நூற்றாண்டின் மத்தியில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எந்த வடிவில் சர்வ சமய மாநாடுகளை நடத்தி வருகின்றதோ அதுபோன்ற மாநாடுகள் பரந்துபட்ட அளவில் நடத்தப்படுவதற்கு ஊக்குவிக்க வேண்டும். (இஸ்லாம் அவ்ர் அஸ்ரே ஹாழிர் கே மஸாயில், பக்கம் 48)

* * * * *

## மார்க்க உலகில் அமைதியின் தூதுவர்

மவ்லானா முனீர் அஹ்மது ஸாஹிப் காதிம் (ஆசிரியர் பத்ர் பத்திரிகை காதியான்)

இன்று உலகம் உண்மை மற்றும் நேர்மை மீது தாகம் கொண்டதாகவும், நீதியை தேடக்கூடியதாகவும் உள்ளது. எங்கு பார்த்தாலும் இருளானது தனது கருமை நிறப் போர்வையை பரப்பி வைத்துள்ளது. சில இடங்களில் ஜாதி சண்டைகள் இருக்கின்றன என்றால் சில இடங்களில் மொழிச் சண்டைகள்; சில இடங்களில் மார்க்கத்தின் பெயரால் குழப்பங்கள் உள்ளன என்றால் சில இடங்களில் அண்டை நாடுகளுடன் பரஸ்பர கருத்து வேறுபாடுகளும் வெறுப்புகளும் நிலவுகின்றன.

சுருக்கமாக கண்ணியத்திற்குரிய மனிதன் தனது நாலாபுறத்திலும் அழிவு மற்றும் நாசத்தின் எப்படிப்பட்ட அபாயகரமான கிடங்குகளைத் தோண்டி வைத்துள்ளான் என்றால், அவற்றை சமப்படுத்தி வழிப்பாதை உருவாக்குவதும் கூட அவனது சொந்த ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகத் தென்படுகின்றது. பயங்கரவாதம் எப்படிப்பட்ட குறுகிய பார்வையை உருவாக்கி வைத்துள்ளது. அதன் விளைவாக வன்முறையும், எல்லையற்ற அநீதி எனும் அபாயகரமான பூதம் உலகின் நாலாபுறத்திலும் வலம் வந்து கொண்டிருக்கிறது. மேலும் எப்படிப்பட்ட அபாயகரமான ஆயுதப் போட்டி துவங்கியுள்ளது என்றால் இன்று ஆயுதப் போட்டியிலிருந்து தடுப்பது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். உலகின் வல்லரசு நாடுகள் அதை குறைக்கின்ற விவகாரத்திலும் ஒரே தளத்தில் ஒன்று கூட முடியவில்லை. நிலைமை இப்படி இருக்க பாவம் படைப்பினங்களில் சிறந்தவனாகிய மனிதன் என்ன செய்ய வேண்டும்? நிராசை மற்றும் நம்பிக்கையின்மைக்கு இரையாகி தமது இரட்சிப்பிற்கான முயற்சியை விட்டு விட வேண்டுமா? அல்லது பின்னர் வெளிச்சத்திற்கான ஏதாவது கதிர் உள்ளதா? நிச்சயமாக உள்ளது! ஆனால் தற்போது இந்த ஒரு பணியானது எந்தவொரு மனித சக்திக்கும் உட்பட்டதாக இல்லை. அதற்கு அல்லாஹ் இக்காலத்தின் இமாமும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை அனுப்பியுள்ளான். அன்னாருடைய மகத்துவ மிக்க கலீஃபாக்கள் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் என்ற அன்னாருடைய ஜமாஅத்தை அல்லாஹ் இந்த பணிக்காக நியமித்துள்ளான். எனினும் நமக்கு வேதனையுடன் இதனைக் கூற நேரிடுகின்றது. அதாவது முஸ்லிம்கள் என்றழைக்கப்படக்கூடிய நபர்களே இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையிலிருந்து நூற்றுக்கணக்கான மைல் தொலைவில் இருக்கின்றனர்; அது மட்டுமல்ல இஸ்லாத்தின் அழகிய முகத்தின் மீது அவர்கள் எப்படிப்பட்ட கறைகளை பூசி வைத்துள்ளனர் என்றால், அதனால் இஸ்லாம் ஒரு பயங்கரவாத மார்க்கமாகும் என்று கூறக்கூடிய சந்தர்ப்பம் அந்நியர்களுக்கு கிடைத்துள்ளது. மேலும் இஸ்லாத்தைப் பரப்புவதற்கு வாளிற்கான அவசியம் உள்ளது என்று அந்நியர்கள் கூறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர். **இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.**

ஆக, கொலைகார மஹ்தியின் வருகை தொடர்பான கொள்கை மற்றும் அவருடைய வருகைக்குப் பிறகு இஸ்லாம் வாளின் வலிமையால் பரப்பப்படும் போன்ற அவர்களின் கொள்கை எப்படிப்பட்ட கொள்கை என்றால், இதனால் மற்ற மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள் இஸ்லாத்தின் மீது கடும் வெறுப்பையும், கோபத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர் . மேலும், இக் கொள்கைகள் இஸ்லாத்தைப் பரப்புகின்ற வழியில் பெரும் தடைகற்களாக நிற்கின்றன.

இந்த பொய்யான கொள்கையை தூள் தூளாக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மெய்யாகவே கூறுகின்றேன். எந்த நபர் இக்காலத்தில் மார்க்கத்தின் பெயரில் போர் புரிகின்றாரோ அல்லது அவ்வாறு போர் புரியக்கூடிய ஒருவருக்கு உதவி செய்கின்றாரோ அல்லது வெளிப்படையாகவோ, மறைவாகவோ அப்படிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகின்றாரோ அல்லது உள்ளத்தில் அப்படிப்பட்ட ஆசையை கொண்டிருக்கின்றாரோ அவர் இறைவன் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாத நபர் ஆவார். ( ஹக்கீக்கத்துல் மஹதி பக்கம் 4)

மேலும் அன்னார் (அலை) கூறினார்கள்: முஸ்லிம்களே! நீங்கள் மார்க்கத்தின் மீதான அனுதாபத்தை மேற்கொள்ளுங்கள். எனினும், உண்மையான அனுதாபம் கொள்ளுங்கள். இந்த பகுத்தறிவு காலகட்டத்தில் மார்க்கத்திற்காக நாம் வாளினால் மக்களை முஸ்லிமாக்க விரும்புவது சிறந்ததா? இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். இந்த அதிதீவிரமான குற்றச்சாட்டை இஸ்லாத்தின் மீது சுமத்தாதீர்கள். அல்லாஹ் காப்பானாக! ஒருபோதும் திருக்குர்ஆன் இந்த போதனையை வழங்கவில்லை. மேலும் ஒரு கொலைகார மஹ்தி அல்லது கொலைகார மஸீஹோ தோன்றுவார்; அவர் வலுக்கட்டாயமாக மக்களை முஸ்லிம்களாக்குவார்; மேலும் மனிதர்களை கொலை செய்வது அவருடைய பணியாக இருக்கும் என்றோ ஒருபோதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கவில்லை. (தூர்யாக்குல் குலூப், ரூஹானீ கஸாயீன் தொகுதி 15 பக்கம் 156)

கண்ணியத்திற்குரிய வாசகர்களே! அஹ்மதிய்யா ஜமாஅத்தை தவிர ஏனைய அனைத்து இஸ்லாமியப் பிரிவுகளின் பார்வையில் இஸ்லாத்தைப் பரப்புவதற்கான ஒரே வழி வாளே ஆகும்.ஒரு வகையில் அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் திருக்குர்ஆன் முன்வைத்த விலை மதிக்க முடியாத அறிவுரைகள் மக்கத்து காஃபிர்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. எனவேதான் நிர்பந்தத்திற்குள்ளாகி இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு வாள் ஏந்த

நேரிட்டது; இதுவே அஹ்மதி அல்லாத முஸ்லிம்களின் பொருத்தவரை இஸ்லாமிய ஜிஹாதிற்கான தத்துவம் ஆகும்.

ஆக இது தொடர்பாக ஜமாஅத்தே இஸ்லாமி அமைப்பின் தலைவர் மவ்லானா அபுல் மவ்தூதி என்பவருடைய நூலான ஜிஹாது ஃபில் இஸ்லாம் என்ற நூலிலிருந்து ஒரு சான்று எடுத்து வைக்கப்படுகின்றது. அவர் இவ்வாறு எழுதுகின்றார்:

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் 13 ஆண்டுகள் வரை அரேபியர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பை விடுத்து வந்தார்கள். தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அறிவுரைக்கான வழிமுறைகளை அன்னார் மேற்கொண்டிருந்தார்கள். வலிமையான சான்றுகளை வழங்கினார்கள். தெளிவான சான்றுகளை முன் வைத்தார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து பகுத்தறிவு பூர்வமான அற்புதங்களை காட்டினார்கள். தமது ஒழுக்கம் மற்றும் பரிசுத்த வாழ்வினால் நன்மைக்கான சிறந்த முன்மாதிரியை எடுத்து வைத்தார்கள். உண்மையை வெளிப்படுத்துவதற்காக எந்தவொரு பயனுள்ள வழிமுறையையும் அவர்கள் விட்டுவிடவில்லை. ஆனால் அன்னாருடைய சமுதாயம் சூரியனைப் போன்று அன்னாருடைய உண்மைத்துவம் வெட்ட வெளிச்சமான பிறகும் அன்னாருடைய அழைப்பை நிராகரித்து விட்டது. ஆனால் அறிவுரை தோல்வியுற்ற பிறகு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பவர் கையில் வாள் ஏந்தினார். அப்போது உள்ளத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக தீமை மற்றும் தீமை எனும் இருள் நீங்க தொடங்கியது. இயல்பிலிருந்து தீயத் தன்மைகள் தாமாகவே வெளியேறி விட்டன. இது மட்டுமின்றி, கண்களில் படிந்திருந்த திரையை அகன்று உண்மையின் ஒளி வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த இஸ்லாத்தின் அனைத்து எதிரிகளுடைய குரல்களையும் கேளுங்கள்! பின்னர் மௌலானா மவ்தூதியுடைய மேற்குறிப்பிட்ட வாக்கியங்களை படித்துப் பாருங்கள்! இதற்கு முன்பு நூற்றுக்கணக்கான இஸ்லாத்தின் எதிரிகள் தூய இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மீது சுமத்திய அதே குற்றச்சாட்டுகளை தானே இவரும் சுமத்தியுள்ளார். இன்னும் கூறப்போனால், அவர்களை விடவும் இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றலின் மீது அதிக அபாயகரமான தாக்குதல் தொடுக்க கூடியவர் ஆவார்.

நீங்கள் இஸ்லாத்தின் எதிரிகளின் வாக்கியங்களை படித்து பாருங்கள்! மவ்லானா மவ்தூதி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆன்மீக ஆற்றலைக் குறித்து பலவீனமா சித்திரத்தை வரைந்துள்ளார். மேலும் அற்புதங்களை நிகழ்த்தும் ஆற்றலின்மை அன்னாரிடம் இருந்தது என்ற பயங்கரமான சித்திரத்தை அவர் வரைந்துள்ளார். இப்படிப்பட்ட விஷயத்தை வேறெந்த இஸ்லாத்தின் எதிரியின் சித்திரத்திலும் காண முடியாது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 13 ஆண்டுகள் இஸ்லாத்திற்கு விடுத்த அழைப்பு உள்ளங்களை வெற்றி கொள்வதிலிருந்து செயலற்றதாக இருந்தது. ஆனால் வாள் மற்றும் பலவந்தத்தால் அன்னார் உள்ளங்களை வெற்றிக் கொண்டு விட்டார்கள் என்பது மவ்தூதியின் கருத்தாகும். (மஸ்ஹப் கே நாம் பர் கூன்: பக்கம் 30)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் ஒளியில் முஸ்லிம்களுக்கு முன்னால் இந்த கொள்கையை வைத்தார்கள். அதாவது ஒரு கொலைகார மஹ்தி வருவது என்பது இஸ்லாமிய மார்க்கத்திற்கு எதிரானதாகும். மேலும் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக எந்தவொரு வாள், அம்பு, துப்பாக்கி மற்றும் குண்டுகளுக்கும் அவசியமும் இல்லை. ஏனென்றால் மார்க்கத்தைப் பரப்புவதற்காக மனிதர்களை கொலை செய்வதை இஸ்லாம் மிகவும் எதிர்க்கின்றது என்ற இந்தக் கொள்கையை முன் வைத்தார்கள். இந்தக் கொள்கையை முன் வைத்த போது, எதிர் தரப்பில் இருந்த மவ்லவிமார்களும், தீவிரவாத முல்லாக்களும் இந்த அமைதி மற்றும் மனிதத்துவத்தின் இளவரசரை காஃபிர் என்றும், மார்க்கமற்றவர் என்றும் இஸ்லாத்தின் வட்டத்தை விட்டு வெளியேறியவர் என்றும் அறிவித்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட (அலை) அவர்கள் கூறினார்கள்:

எந்தவொரு கொலைகார மஹ்தியோ அல்லது மஸீஹோ உலகில் வரமாட்டார். மாறாக சமாதானத்துடன் வரவிருந்த அந்த நபர் நானே ஆவேன்; என்ற செய்தியை நான் இந்தியாவின் முஸ்லிம்களுக்கு கூறிய அந்த நேரத்தில், அப்போதிருந்து இன்று வரை இந்த அறிவீன மௌலவிகள் என் மீது பகைமை கொண்டுள்ளனர் என்பது வேதனையாகும். மேலும் என்னை காஃபிர் என்றும் மார்க்கத்திலிருந்து வெளியேறியவர் என்றும் அறிவித்துள்ளனர். வினோதமான விஷயம் என்னவென்றால் இந்த மக்கள் மனித குலத்தை கொன்று குவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால் இதுவோ திருக்குர்ஆனின் போதனை அல்ல. (தஹ்ஃபா கைஸரிய்யா, ரூஹானி கஸாயீன், தொகுதி 12, பக்கம் 265)

. இன்றிலிருந்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தின் சேவகர், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் பேரன்பர் மற்றும் திருக்குர்ஆனின் பேரன்பர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் மார்க்க உலகில் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான இளவரசராக திகழ்ந்து இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகின் முன்னால் எடுத்து வைத்தார்கள். ஆனால் மிகவும் வேதனையுடன் கூற நேரிடுவது என்னவென்றால் இந்த வெளிப்படைவாதிகள் மற்றும் சுயநலவாத அரசியல்வாதிகளும், சுயநலம் கொண்ட ஆலிம்களும் இறைவனால் அனுப்பப்பட்ட இந்த நபரின் குரலை மட்டும் நிராகரிக்கவில்லை. மாறாக அவரை எதிர்ப்பதிலும், அவருக்கு துன்பத்தை ஏற்படுத்துவதிலும், அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதிலும் எந்தவிதமான

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

குறைவும் வைக்கவில்லை.

**இஸ்லாமிய ஜிஹாதின் உண்மைத்துவம்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாமிய ஜிஹாதின் உண்மைத்துவத்தை விளக்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

சில அறிவீனர்கள் இஸ்லாத்தின் மீது ஜிஹாதிற்கான குற்றச்சாட்டை சுமத்துகின்றனர். மேலும் இந்த அனைத்து மக்களும் பலவந்தமாக வாளினால் முஸ்லிமாக்கப்பட்டார்கள் என்று கூறுகின்றனர். ஆனால் மிகவும் வேதனை என்னவென்றால் அவர்கள் தங்களது அநீதியிலும், உண்மையை மறைப்பதிலும் எல்லை கடந்து விட்டனர். அந்தோ! இவர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது! அவர்கள் அறிந்து கொண்டே உண்மையான சம்பவங்களிலிருந்து முகத்தை திருப்பிக் கொள்கின்றனர். நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபு தேசத்தில் ஓர் அரசராக வெளிப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்திருந்தால், அன்னார் (ஸல்) ஆட்சியும், , சர்வதிகாரமும், வலிமையும் பெற்றிருந்தார்கள். எனவே மக்கள் தங்களது உயிரை பாதுகாத்துக் கொள்ள அன்னாரின் கொடியின் கீழ் சென்று விட்டனர் என்று கருதிக் கொள்ள முடியும். எனவே இங்கு எழுகின்ற கேள்வி என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஏழ்மையிலும், வறுமையிலும் தனிமையின் நிலையிலும் ஏக இறை வணக்கம் தொடர்பாகவும் தமது நபித்துவம் தொடர்பாகவும் அறிவிக்க தொடங்கியிருந்தார்கள். அப்போது அந்த நேரத்தில் எந்த வாளின் அச்சத்தால் மக்கள் அன்னார் (ஸல்) மீது நம்பிக்கை கொண்டிருந்தார்கள். மேலும் ஈமான் கொண்டிருக்கவில்லை என்றால், பின்னர் பலவந்தப்படுத்துவதற்காக எந்த அரசரிடம் இருந்து ஒரு படையை அன்னார் பெற்றுக் கொண்டிருந்தார்கள்? மேலும் உதவி தேடிக் கொண்டிருந்தார்கள்? உண்மையைத் தேடுபவர்களே! நீங்கள் நிச்சயம் புரிந்து கொள்ளுங்கள்! இந்த அனைத்து விஷயங்களும் இஸ்லாத்தின் எதிரிகளால் இட்டுக்கட்டப்பட்டவை ஆகும். வரலாற்றைப் பாருங்கள்! அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட ஒரு அனாதை சிறுவராக இருந்தார்கள் என்றால் அன்னாருடைய தந்தை அன்னார் பிறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பே மரணமடைந்திருந்தார்கள். தாயோ குழந்தை பிறந்த சில மாதங்களுக்கு பிறகு மரணித்து விட்டிருந்தார்கள் அப்போது, எந்தக் குழந்தையின் மீது இறைவனின் கரம் இருந்ததோ மேலும் எந்தக் குழந்தை எவ்விதமான ஆதரவும் இன்றி இருந்ததோ அது இறைவனின் அடைக்கலத்தில் வளர்ந்து கொண்டிருந்தது. மேலும் அந்தத் துன்பமான மற்றும் அனாதையான காலத்தில் அன்னார் (ஸல்) சில நபர்களின் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும் இறைவனைத் தவிர அன்னாருக்கு வேறு எந்த பாதுகாவலரும் இருக்கவில்லை. மேலும் 25 வயதை அடைந்த பிறகும் கூட எந்த சிறிய தந்தையாரும் தமது மகளை அன்னாருக்கு திருமணம் முடித்துக் கொடுக்கவில்லை. ஏனென்றால் வெளிப்படையாக தென்பட்டுக் கொண்டிருந்தது போன்று அன்னார் (ஸல்) குடும்ப செலவுகளை செய்வதற்கு பொருளாதார ரீதியில் தகுதியானவராக அப்போது இருக்கவில்லை. மேலும் எழுதப் படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள்; எந்தவொரு தொழிலையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. பின்னர் அன்னார் (ஸல்) 40 வயதை அடைந்தபோது திடீரென அன்னாருடைய உள்ளம் இறைவன் பக்கம் ஈர்க்கப்பட்டது.

மக்காவிலிருந்து சில மைல் தொலைவில் அமைந்திருந்த ஹிரா என்ற பெயரைக் கொண்ட குகைக்கு அன்னார் (ஸல்) தனியாக சென்றார்கள். மேலும் குகையினுள் ஒளிந்து மறைந்து கொண்டார்கள் மேலும் தமது இறைவனை நினைவு கூர்ந்தார்கள்; ஒருநாள் அதே குகையில் அன்னார் (ஸல்) மறைவாக இறைவணக்கம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது அல்லாஹ் அன்னாரிடத்தில் வெளிப்பட்டான். மேலும் உலகம் இறைவழியை விட்டு விட்டது; மேலும் பூமி பாவத்தால் நிறைந்து விட்டது; எனவே நான் உம்மைத் தூதராக ஆக்கி அனுப்புகின்றேன்; இனி நீர் மற்ற மக்களை எச்சரிக்கை செய்வீராக! மேலும் அவர்கள் தண்டனைக்கு முன்பாக இறைவனின் பக்கம் குனிந்து விட வேண்டும் என்று அவர்களுக்கு இறைவன் கட்டளையிட்டான். இந்தக் கட்டளையை செவியுற்ற உடன் அன்னார் (ஸல்) அச்சம் அடைந்து விட்டார்கள். நானோ எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நபராக இருக்கின்றேன்; எனக்கு எழுதப் படிக்க தெரியாது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்போது இறைவன் அன்னாருடைய இதயத்தில் அனைத்து ஆன்மீக ஞானங்களையும் நிறைத்து விட்டான். மேலும் அன்னாரின் உள்ளத்தை ஒளிமயமாக்கி விட்டான். மேலும் அன்னார் (ஸல்) பரிசுத்த ஆற்றலின் தாக்கத்தால் ஏழைகள் மற்றும் வறிய மக்களை தம்முடைய கட்டுப்பாட்டின் வட்டத்தில் கொண்டு வரத் தொடங்கி விட்டார்கள். மேலும் பெரும் மனிதர்களாக இருந்தவர்கள் எதிர்ப்பு மற்றும் பகைமையில் முன்னேறினார்கள். எந்த அளவிற்கு என்றால், இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கொலை செய்ய விரும்பினார்கள். இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மறைவாக மதீனாவிற்கு சென்றடைந்தார்கள். மேலும் மதீனாவின் பெரும்பான்மையான மக்கள் அன்னாரை ஒப்புக் கொண்டனர். அதனால் மக்காவாசிகளின் கோபம் மேலும் அதிகரித்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு இரவு பகலாக மீண்டும் சதித் திட்டம் தீட்டத் துவங்கினர். மக்கத்து காஃபிர்களின் அநீதிகள் எல்லை கடந்து சென்றனர். அவர்கள் அப்பாவி முஸ்லிம் பெண்களையும், அனாதைகளையும் கொலை செய்யத் துவங்கினர். மேலும் சில பெண்களை எந்த அளவிற்கு கொடூரமாக கொலை செய்தனர் என்றால் அவர்களின் இரண்டு கால்களையும் இரண்டு கயிறுகளால் கட்டி இரண்டு ஒட்டகங்களைக் கொண்டு எதிர் திசையில் ஓடச் செய்து அந்தப் பெண்களின் உடல்களை இரு துண்டுகளாகப் பிளந்தார்கள். கருணையற்ற காஃபிர்கள் அநீதிகளில் இந்த அளவிற்கு எல்லை கடந்து விட்டனர்.**(இதன் தொடர்ச்சி 22-ம் பக்கம்.....)**

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமுதாய ஒற்றுமை தொடர்பாக வழங்கிய பொன்னான வழிகாட்டல்கள்

மவ்லவி H. ஷம்ஸுத்தீன் (ஆசிரியர் பத்ர் வார இதழ், மலையாளம்)

சமுதாய ஒற்றுமை என்பதன் பொருள் ஒரு சமுதாயத்தில் உள்ள அனைத்து நபர்களுக்கும் மத்தியில் எப்படிப்பட்ட ஒரு ஒருமைப்பாடு, ஒற்றுமை மற்றும் பரஸ்பர நம்பிக்கை நிலவ வேண்டும் என்றால் அது இனம், மதம், மற்றும் நிற பாகுபாடின்றி உன்னதமாக இருக்க வேண்டும். இது எப்படிப்பட்ட ஒரு நிலை என்றால், அதில் சமுதாயத்தின் அனைத்து இனத்தவரும், பிரிவினர்களும் இணைந்து ஒரே நோக்கத்திற்காக செயல்பட வேண்டும்; மேலும் ஒருவர் மற்றவரின் இன்ப, துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். உலகில் ஒவ்வொரு மட்டத்திலும் காண்கின்ற வெற்றி மற்றும் சமாதானத்தின் இரகசியம் இந்த அடிப்படை விஷயத்தில் தான் மறைந்துள்ளது. ஒரு சமுதாயம் ஒற்றுமையின் உறவில் பிணைந்திருக்கும்போது அது உட்புற மற்றும் வெளிப்புற சவால்களை துணிவோடு எதிர்கொள்கிறது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. ஆனால் அந்த சமுதாயத்தில் பிரிவினை ஏற்படும் போது அந்த சமுதாயம் தன்னுடைய சக்தியை இழந்து விடுகின்றது.

### சமுதாய ஒற்றுமையும் கண்ணியத்திற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும்

திருக்குர்ஆன் சமுதாய ஒற்றுமையின் மீது அழுத்தம் கொடுத்தவாறு இவ்வாறு கூறுகிறது:

كَانَ النَّاسُ أُمَّةً وَّاحِدَةً

எல்லா மக்களும் ஒன்றுபட்ட (எண்ணங்கொண்ட)வர்களாகவே இருந்தனர். (அல் பக்கரா 2:214)

மிகவும் வேதனைக்குரிய விஷயம் என்னவென்றால், மனிதகுலம் இந்த உண்மையை உதாசீனம் செய்துவிட்டு பிரிவினைக்கு வழிவகுத்தது.

எனவே எல்லாம் வல்ல இறைவன் மீண்டும் மனிதகுலத்தை ஒரே சரடில் கோர்ப்பதற்காக இரு உலகிற்கும் தலைவரான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களை அனுப்பி இவ்வாறு கட்டளையிட்டான்:

قُلْ يَا أَيُّهَا النَّاسُ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا الَّذِي لَهُ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ لَا إِلَٰهَ إِلَّا هُوَ يُحْيِي وَيُمِيتُ فَآمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ النَّبِيِّ الْأُمِّيِّ الَّذِي يُؤْمِنُ بِاللَّهِ وَكَلِمَاتِهِ وَاتَّبِعُوهُ لَعَلَّكُمْ تَهْتَدُونَ

நீர் கூறுவீராக: மக்களே! நிச்சயமாக நான் உங்கள் எல்லாருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன். வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் ஆட்சி அவனுக்கே உரியது. அவனையன்றி வணக்கத்திற்குரியது எதுவுமில்லை. அவன் உயிரை வழங்கவும், மரணத்தை அளிக்கவும் செய்கின்றான். எனவே நீங்கள் அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்விடத்தும், அவனது வசனங்களிடத்தும் நம்பிக்கை கொண்டுள்ள, எழுத்தறிவற்ற நபியாகிய அவனுடைய தூதரிடத்தும் (நம்பிக்கை கொள்ளுங்கள்). மேலும் நீங்கள் நேர்வழி பெறும் பொருட்டு அவரையே பின்பற்றுங்கள்.
(அல் அஃராஃப் 7: 159)

இந்த நோக்கத்தை முழுமைப்படுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழு உலகையும் எச்சரிக்கை செய்யக்கூடிய உலகளாவிய ஷரீஅத்தான திருக்குர்ஆனை வழங்கினான். (அல் ஃபுர்கான் 25: 2)

இந்த வேதத்தில், வேதம் வழங்கப்பட்டவர்கள் மற்றும் முழு மனித இனத்திற்கும் அல்லாஹ் இந்த தூதுச் செய்தியை வழங்கியுள்ளான்:

قُلْ يَا أَهْلَ الْكِتَابِ تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ أَلَّا نَعْبُدَ إِلَّا اللَّهَ وَلَا نُشْرِكَ بِهِ شَيْئًا وَلَا يَتَّخِذَ بَعْضُنَا بَعْضًا أَرْبَابًا مِّن دُونِ اللَّهِ

வேதத்தைவுடையவர்களே! எங்களுக்கும், உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்கமாட்டோம், அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம், அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர் வேறு சிலரை கடவுள்களாக ஆக்கி கொள்ளமாட்டோம். (ஆலி இம்ரான் 3: 65)

மேலும் அன்னார் (ஸல்) சமுதாய ஒருமைப்பாட்டிற்காக எப்படிப்பட்ட உயர்வான முன்மாதிரியை நிலைநாட்டியுள்ளார்கள் என்றால், கருப்பர், வெள்ளையர், வேலைக்காரர் முதலாளி, அரேபியர், அரேபியர் அல்லாதோர் என அனைவரையும் ஒரே அணியில் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்கள். அதாவது எவரும் அடிமையும் இல்லை; எவரும் எஜமானனும் இல்லை .

மேலும் தமது ஹஜ்ஜத்துல் விதா சந்தர்ப்பத்தின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இறுதி தூதுச் செய்தியில் மீண்டும் ஒருமுறை பொது மக்களுக்கு சமுதாய ஒற்றுமைக்கான அறிவுரையை வழங்கியவாறு أَلَا فَلْيُبَلِّغِ الشَّاهِدُ مِنْكُمُ الْغَائِبَ என்ற இந்த வழிகாட்டலையும் சமுதாயத்தினருக்கு வழங்கியுள்ளார்கள். பொருள்: இந்த தூதுச் செய்தியை, இங்கு வருகை தந்துள்ளவர்கள் இங்கு வராதவர்களிடம் எட்ட வைத்து விடவும். (கிதாபுல் புஹாரீ)

### சமுதாய ஒற்றுமையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும்

இக்காலகட்டத்தில் இமாம் மஹ்தியின் வருகையின் அசல் நோக்கமே உம்மத்தை மீண்டும் ஒரு தனித்துவம் கொண்ட ஜமாஅத்தாக உருவாக்க வேண்டும் என்பதே ஆகும். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இமாம் மஹ்தியின் மூலமாக நிறுவப்படுகின்ற ஜமாஅத் தொடர்பாக இவ்வாறு கூறியுள்ளார்கள்:

அது ஒரு ஜமாஅத்தாக இருக்கும். تَلْزَمُ جَمَاعَةَ الْمُسْلِمِينَ وَإِمَامَهُمْ நீங்கள் ஜமாஅத்துல் முஸ்லிமீன் மற்றும் அவர்களுடைய இமாமை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும்,

فَاعْتَزِلْ تِلْكَ الْفِرَقَ كُلَّهَا، وَلَوْ أَنْ تَعَضَّ بِأَصْلِ شَجَرَةٍ، حَتَّى يُدْرِكَكَ الْمَوْتُ، وَأَنْتَ عَلَى ذَلِكَ

அந்த பிரிவுகள் அனைத்தையும் விட்டு

(விலகி) ஒதுங்கிவிட வேண்டும்; மேலும் ஒரு மரத்தின் வேர் பாகத்தை பற்களால் உமக்கு கவ்விப் பிடித்திருக்க நேர்ந்து, அதே நிலையில் மரணம் உம்மைத் தழுவிக் கொண்டாலும் அதுவே உமக்கு சிறந்ததாகும். (ஸஹீஹ் புகாரி : ஹதீஸ் எண்: 7084)

எனவே எல்லாம் வல்ல அல்லாஹ் அந்த ஃபாரசீக வம்சாவளியைச் சேர்ந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இந்தக் கட்டளையை வழங்கினான்: أَجْمِعُوْا مَنْ فِي الْأَرْضِ مِنَ الْمُسْلِمِيْنَ لِيَجْتَمِعُوْا عَلٰى دِيْنٍ وَّاحِدٍ

பூமியின் மேற்பரப்பில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவும்.

இதை விளக்கத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:.

ஒரே மார்க்கத்தில் அனைவரையும் ஒன்றிணைத்தல் என்ற இந்தப் பணியானது ஒரு சிறப்பு மிக்க பணியாகும். மேலும் என்னுடைய இந்த இல்ஹாமில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த விஷயமானது இவ்வாறானதாகத் தெரிகிறது. அதாவது எல்லாம் வல்ல அல்லாஹ் பூமியில் உள்ள அனைத்து முஸ்லிம்களும் عَلٰى دِيْنٍ وَّاحِدٍ. அதாவது ஒரே மார்க்கத்தில் ஒன்றிணைய வேண்டும் என்பதை விரும்புகின்றான். மேலும் அது கட்டாயம் நடந்தே தீரும். அவர்களுக்குள் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்காது என்பது இதன் பொருள் அன்று; கருத்து வேறுபாடும் காணப்படும். ஆனால் அந்த கருத்து வேறுபாடானது குறிப்பிடத்தக்கதாகவும், கவனத்தில் கொள்ளக்கூடிய அளவிற்கும் இருக்காது.'

(அல்ஹக்கம் தொகுப்பு 9, எண் 42 தேதி நவம்பர் 30,1905 பக்கம் 2)

இறுதி காலத்தில் மக்களை ஒரே உம்மத்தாக ஆக்குவது, சமுதாய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவை தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அருளுக்குரிய வழிகாட்டல் பின்பற்றத் தக்க ஓர் அடிப்படையான விஷயம் மட்டுமல்ல; மாறாக அது கலங்கரை விளக்கமாகவும் இருக்கின்றது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

முதலில் மனித இனம் ஒரு சமுதாயத்தைப் போன்றே இருந்தது. அதன் பிறகு முழு உலகிலும் அந்த சமுதாயமானது பரவி விட்டபோது இறைவன் அவர்களின் வசதிக்காகவும், அவர்கள் ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டும் அந்த சமுதாயங்களை பல பிரிவுகளாக ஆக்கிவிட்டான். மேலும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அவர்களுடைய நிலைமைக்கேற்றவாறு ஒரு மார்க்கத்தை நியமித்திருந்தான்.

இது தொடர்பாக அவன் கூறுகின்றான்:

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُمْ مِّنْ ذَكَرٍ وَّأُنْثٰى وَجَعَلْنَاكُمْ شُعُوْبًا وَّقَبَائِلَ لِتَعَارَفُوْا

மக்களே! நாம் உங்களை ஆண், பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக, நாம் உங்களைக் கோத்திரங்களாகவும், இனங்களாகவும் ஆக்கியுள்ளோம். (அல் ஹுஜுராத் 49:14)

மேலும் கூறுகின்றான்:

لِكُلٍّ جَعَلْنَا مِنْكُمْ شِرْعَةً وَّمِنْهَاجًا وَلَوْ شَاءَ اللّٰهُ لَجَعَلَكُمْ أُمَّةً وَّاحِدَةً وَّلٰكِنْ لِّيَبْلُوَكُمْ فِيْ مَا آتَاكُمْ فَاسْتَبِقُوا الْخَيْرَاتِ

உங்கள் எல்லாருக்கும் சட்டத்தையும், வழியையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். அல்லாஹ் விரும்பியிருந்தால் உங்களை ஒரே (இன) மக்களாக ஆக்கியிருப்பான். ஆனால், அவன் உங்களுக்கு வழங்கியதனைக் கொண்டு உங்களை சோதிக்க விரும்புகிறான். எனவே முஸ்லிம்களே! நீங்கள் ஓடிச் சென்று நன்மைகளை பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் எல்லா சமுதாயத்தின் தொகுப்பு ஆவீர்கள். மேலும் எல்லா நல்ல இயல்புகளும் உங்களிடம் இருக்கின்றன.

(அல் மாயிதா 5: 49)

(சஷ்மயே மரிஃபத், ரூஹானீ கஸாயின் தொகுதி 33, பக்கம் 144-146)

وَضَعْنَا النَّاسَ تَحْتَ أَقْدَامِكَ

எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய சமுதாய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டிற்கான இந்த இயக்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக அன்னாருக்குப் பிறகு அன்னாரின் சந்ததிகளிலிருந்து அதாவது பாரசீக மக்களின் மூலமாக நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தை நிறுவினான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பாரசீக வம்சத்தைச் சார்ந்த பலர்) என்ற நற்செய்தியை வழங்கியுள்ளார்கள்.

அதாவது அவர்களிலிருந்து மகத்துவ மிக்க நபர்களை எழுப்புவான். எனவே இந்த முன்னறிவிப்பிற்கு ஏற்ப ஒருவர்பின் ஒருவராக 5 மகத்துவமான கலீஃபாக்கள் அன்னாரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மேலும் அதிகப்படியாக எல்லாம் வல்ல அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் மூலமாக இவ்வாறு அறிவித்திருந்தான் : إِنِّيْ مَعَكَ يَا مَسْرُوْرُ

மஸ்ரூரே! நிச்சயமாக நான் உன்னுடன் இருக்கின்றேன்.

இதன் மூலமாக அல்லாஹ் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய கிலாஃபத்தின் பக்கமும் அடையாளப்படுத்திக் காட்டி விட்டான்.

இதன் தொடர்ச்சியாக அன்னாருக்கு இந்த இறையறிவிப்பும் வந்தது. وَضَعْنَا النَّاسَ تَحْتَ أَقْدَامِكَ

நாம் மக்களை உம்முடைய பாதங்களின் கீழ் ஆக்கிவிட்டோம். (துஸ்கிரா 630)

### சமுதாய ஒற்றுமைக்காக ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள்

சமுதாய ஒற்றுமை எனும் அந்த மகத்தான நோக்கமானது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் மூலமாகவே முழுமையடையும் என்ற உண்மையையும் இந்த முன்னறிவிப்புகள் தெளிவுபடுத்துகின்றன. எனவே ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தங்களின் எண்ணற்ற குத்பாக்கள், உரைகள் மற்றும் கட்டுரைகள் மூலமாக இதன் உண்மை நிலையை மட்டும் விவரிக்கவில்லை; மாறாக அதன் செயல் தேட்டங்கள்

தொடர்பான வழிகாட்டலையும் வழங்குகின்றார்கள்.

**சமுதாய ஒற்றுமையின் உண்மை நிலை**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

'ஒரு நாட்டின் குடிமகன், நாட்டின் குடிமகன் என்ற நிலையில் தன்னுடைய நாட்டின் மீது விசுவாசமும், நேசமும் கொள்கின்றார். மேலும் ஒவ்வொரு நாட்டின் அஹ்மதிக்கும் தன்னுடைய நாட்டை உலகில் உள்ள நாடுகளில் சிறந்ததாக வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் இருக்கின்றது. அதற்காக அவர் முயற்சியும் செய்கின்றார். துஆவும் செய்கின்றார். மேலும் அவ்வாறு செய்யவும் வேண்டும்.

ஓர் அஹ்மதி தன்னுடைய சொந்த முயற்சியின் மூலமாக நாட்டில் எந்த ஓர் அரசியலிலும் அல்லது அரசியல் அமைப்பிலும் இணைந்து அதில் பங்கு வகிக்கின்றார். உலகிலுள்ள எண்ணற்ற நாடுகளில் உள்ள அஹ்மதிகள் அரசாங்க அமைப்புடன் இணைந்து நாட்டின் நன்மைக்காக செயல்படுகிறார்கள். அதே வேளையில் எதிர்க்கட்சிகளின் அமைப்பிலும் இணைந்து நாட்டின் கட்டமைப்பு மற்றும் முன்னேற்றத்தில் தன்னுடைய பங்களிப்பை வெளிப்படுத்துகிறார்கள். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் நாட்டின் குடிமகன் என்ற நிலையில் நாட்டினுடைய அரசியல் விவகாரங்களில் ஈடுபாட்டை செலுத்தலாம்; செலுத்தவும் வேண்டும். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஜமாஅத் என்ற நிலையிலோ அல்லது அஹ்மதிய்யா கிலாஃபத் என்ற நிலையில் எந்த ஆளுமையையோ, எந்த நாட்டினுடைய அரசாங்கத்தையோ கைப்பற்றுவதில் எந்தவொரு விருப்பமும் இல்லை. மேலும் இது எங்களுடைய நோக்கமும் அல்ல. ஏனென்றால் எங்களுக்கு எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசர் மற்றும் பேரன்பர் எந்த வழியை காண்பித்துள்ளார்களோ அது பௌதீக நாடுகளை அடைவதற்கானதல்ல. மாறாக ஆன்மிக அரசாங்கத்தை அடைவதற்கானதாகும். மேலும் எல்லாம் வல்ல அல்லாஹ்வினுடைய திருப்தி எனும்; கிரீடத்தை பெறுவதாகும். இதுவே எங்களுடைய நோக்கமாகும். எப்போதெல்லாம் ஏதாவது ஒரு அரசாங்கத்திற்கு நாட்டின் கட்டமைப்பு மற்றும் முன்னேற்றப் பணிகளில் ஆலோசனைகள் மற்றும் அர்ப்பணிப்புகளின் தேவை இருக்குமோ அப்போதெல்லாம் அஹ்மதிய்யா ஜமாஅத் அதில் கலந்து கொண்டது. இனியும் கலந்து கொள்ளவும் செய்யும்.'

**முஸ்லிம் உம்மத்திற்கு ஒற்றுமையுடன் இருப்பதற்கான அறிவுரை**

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உம்மத்தை நோக்கி இவ்வாறு கூறுகிறார்கள்: சவுதி அரேபியாவில் தற்போது கடந்த நாட்களில் அதாவது நேற்று முன் தினம் ஈத் பெருநாளாக இருந்தது. அதில் கஅபாவின் இமாமும் மக்காவில் ஹஜ் பெருநாளின் குத்பாவில் முஸ்லிம் நாடுகளுக்கும், முஸ்லிம் உம்மத்தினருக்கும் அவர்களுடைய பொறுப்புகளை புரிந்து கொள்வதன் பக்கம் கவனமூட்டினார். மேலும் நாம் ஒற்றுமையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்பதன் பக்கமும் கவனமூட்டியுள்ளார். ஒரு நீண்ட நெடிய குத்பா ஆகும். ஆனால் அதனுடைய சுருக்கம் இதுவே ஆகும்.

ஆனால், தற்போது அவர்களுக்கு இந்த ஒற்றுமையை பெறுவது அவர்கள் உருவாக்கிய விதிமுறைகளின்படி சாத்தியம் இல்லை. முன்பே கூறப்பட்டு விட்டது போன்று, முதல் விஷயம் என்னவென்றால், அவர்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள். அவர்களிடம் தன்மானமும் எஞ்சியிருக்கவில்லை; மார்க்கமும் எஞ்சியிருக்கவில்லை. உலகத்தையும் இழந்து விட்டனர். முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றிணைப்பதற்கு அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைகளின்படி நடக்க வேண்டும். சுயமாக உருவாக்கிக் கொண்ட வழிமுறைகள் மற்றும் ஏதாவது இமாமுடைய வழிமுறைகளால் பயனளிக்காது. அல்லாஹ் யாரை இமாமாக அனுப்பி உள்ளானோ அந்த இமாமுடைய வழிமுறைதான் பயனளிக்கும். "பூமியின் மேற்பரப்பில் உள்ள அனைத்து முஸ்லிம்களையும் ஒன்று சேருங்கள் என்று அல்லாஹ் எந்த இமாமிடம் இல்ஹாம் மூலமாக கூறினானோ அவருடன் இணைந்து கொள்ள வேண்டும். எனவே காலத்தின் இமாமுடன் இணைத்து கொள்பவர் தான் இந்த நோக்கத்தை பெற முடியும்.' (ஹஜ்ஜுப் பெருநாள் உரை நவம்பர் 7, 2011)

**பிளவு படுவதிலிருந்து காத்துக் கொள்ளுங்கள்**

அல்லாஹ் இறுதி காலத்தில் இமாம் மஹ்தியின் மூலமாக கிலாஃபத்தின் வலுவான கயிற்றை வழங்கி உம்மத்திற்கு இவ்வாறு அறிவுரை செய்துள்ளான்: அதாவது நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். மேலும் நீங்கள் பிரிந்துபோய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் (ஒருவருக்கொருவர்) எதிரிகளாயிருந்தீர்கள். பின்னர் அவன் உங்கள் உள்ளங்களில் நட்பை உண்டாக்கினான். எனவே நீங்கள் அவனுடைய அருளினால் உடன் பிறப்புபோல் ஆகிவிட்டீர்கள். (ஆலி இம்ரான் 3: 104)

இந்த இறைக் கட்டளையின் பக்கம் கவனமூட்டியவாறு, மேலும் முஸ்லிம் உம்மத்தில் காணப்படுகின்ற பிரிவுகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய அழிவிற்குரிய விளைவுகளை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

'முஸ்லிம்கள் ஒன்றிணைந்து விட்டால் இந்த இக்கட்டான நிலையிலிருந்து வெளிவர முடியும். (ஜுமுஆ உரை ஜுலை 7, 2023).

இந்த அறிவுரையானது முஸ்லிம் உம்மத்தில் ஏற்பட்டுள்ள விரிசல் மற்றும் பிளவுகள் அவர்களை பலவீனமானவர்களாக மட்டும் ஆக்கவில்லை. மாறாக எதிரிகளுக்கு முஸ்லிம்கள் மீது வெற்றி பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும்

அளிக்கின்றது என்ற இந்த உண்மை நிலையினை விவரிக்கின்றது.

உலகளாவிய அமைதிக்காக ஒற்றுமையின் அவசியத்தின் மீது அழுத்தம் கொடுத்தவாறு உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்கிடையிலான போர்க் காட்சிகளைப் பார்த்து ஹுஸூர் கூறுகிறார்கள்: 'இந்த போரில் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டதைப் போன்று, முஸ்லிம்களாகிய நாமும் அவர்களிடமிருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் முஸ்லிம்கள் ஒரே கலிமாவை கூறக் கூடியவர்களாக இருந்தும் கூட ஒருபோதும் ஒன்றிணைவதில்லை. ஒரு நாட்டை அழித்துவிட்டார்கள். ஈராக்கை அழித்துவிட்டார்கள். சிரியா அழிந்து விட்டது. ஏமனை அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் இவை அனைத்தையும் அடுத்தவர்களை ஏவியும் செய்கிறார்கள்; சுயமும் செய்கிறார்கள். இவை அனைத்தையும் தவிர்த்துவிட்டு ஒன்றாக இணைவதற்கு பதிலாக இவ்வாறு செய்கின்றார்கள். குறைந்தது இந்தப் பாடத்தையாவது முஸ்லிம்கள் அந்த மக்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்'. (ஜுமுஆ உரை மார்ச் 11, 2022)

**நீதி மற்றும் உதவி**

உலகளாவிய ஒற்றுமையே அமைதிக்கான திறவுகோல் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தியவாறு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹு) அவர்கள் கூறுகிறார்கள்:

'If these measures are taken then it will soon become apparent that the existing conflicts will end and be replaced by peace and mutual respect, provided true justice is practised and each country realises its responsibility. It is with great regret that I must say that all though it is an Islamic teaching the Islamic countries have been unable to unite amongst themselves."

இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், உண்மையான நீதி நடைமுறைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு நாடும் அதன் பொறுப்பை உணர்ந்தால், தற்போதுள்ள மோதல்கள் முடிவுக்கு வந்து, அமைதி மற்றும் பரஸ்பர மரியாதையால் மாற்றப்படும் என்பது விரைவில் தெளிவாகத் தெரியும். இது ஓர் இஸ்லாமிய போதனையாக இருந்தாலும், இஸ்லாமிய நாடுகள் தங்களுக்குள் ஒன்றுபட முடியவில்லை என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் கூறுகிறேன்.'
(Press Release alislam.org)

இந்த வழிகாட்டல் சமுதாய ஒற்றுமைக்கான அடிப்படை கோட்பாடுகளை விளக்கும் வகையில் உள்ளது. அது அல்லாமல் அதாவது நீதி மற்றும் பரஸ்பர உதவி ஆகியவற்றை தவிர்த்து விட்டு ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது.

**பொதுவான வழிகாட்டல்கள்**

France ல் நடைபெற்ற 27 வது ஆண்டு மாநாட்டின் (அக்டோபர் 5, 2019) சந்தர்ப்பத்தில் கண்ணியத்திற்குரிய குடிமக்கள் மற்றும் விருந்தினர்களுடன் உரை நிகழ்த்தியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு) அவர்கள் கூறுகிறார்கள்:

"A true Muslim is a person who is himself peaceful and who strives to establish peace and harmony in the world".

' உண்மையான முஸ்லிம் என்பவர் சுயமே அமைதியானவராகவும், உலகில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட பாடுபடுபவருமாவார்.'
(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் ஜுலை 14, 2020)

அதேபோன்று ஐரோப்பாவின் நாடாளுமன்றத்தில் (பெல்ஜியம் டிசம்பர் 4, 2012) பத்திரிக்கையாளர்களுடனான சந்திப்பின்போது, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

' Islam's message of peace is universal which is why our Moto is love for all Hatred for none." (alislam.org/articles)

' இஸ்லாத்தின் அமைதிக்கான செய்தி உலகளாவியதாகும், இதனால்தான் எங்களுடைய முழக்கம் எல்லோரிடத்திலும் அன்பு எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்பதாகும்.

For decades he has been advising Muslims that unity is the only way to free the Muslim world from their shackles of discord "

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் முஸ்லிம் உலகத்தை பிரிவினைகளின் விலங்குகளிலிருந்து விடுவிப்பதற்கான ஒரே வழி ஒற்றுமைதான் என்று அவர் பல தசாப்தங்களாக முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தி வருகிறார்.
(அல் ஹக்கம் டிசம்பர் 15, 2023)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜூன் 13, 2025 அன்று ஆற்றிய தமது ஜுமுஆ பேருரையில் ஈரான், இஸ்ரேல் போர்களை கருத்தில் கொண்டு துஆக்கள் செய்யுமாறு அறிவுரை வழங்கியவாறு கூறுகிறார்கள்:

இந்த நேரத்தில் உலகின் பொதுவான நிலைமைகளுக்காகவும் துஆக்கள் செய்து வாருங்கள் என்று பெரும்பாலும் நான் கூறியுள்ளேன். போர் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. மேலும் அல்லாஹ் இந்த பேரழிவுகளில் இருந்து நம்மை பாதுகாப்பானாக! ஏனென்றால் இப்போதோ ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி விட்டது. மேலும் போரின் இந்த நிலையை பயங்கரமான நிலையை எட்டி விட்டது. இஸ்ரேலிய அரசாங்கத்தைச் சேர்ந்த இவர்கள் ஒவ்வொன்றாக எல்லா முஸ்லிம் நாடுகளுக்கும் நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்றே விரும்புவார்கள். ஆனால் முஸ்லிம் நாடுகள் உறங்கிக் கொண்டிருக்கின்றன. தமது முன்னேற்றம், தமது பிற முன்னுரிமைகள் ஆகியவற்றிலேயே மூழ்கி இருக்கின்றன. மேலும் என்ன நடக்கும்? என்பதே அவர்களுக்கு புரியவில்லை. முஸ்லிம்களிடம் நற்செயல்களும் எஞ்சி இருக்கவில்லை; அவர்களுக்கு துஆவின் பக்கம் கவனமும் இல்லை. இவ்வாறான நிலையில் இவர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை பற்றி இவர்களால் கற்பனைக் கூட செய்து பார்க்க முடியாது. அல்லாஹ் முஸ்லிம்களாகிய இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! மேலும் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தட்டுமாக! அவர்கள் தமது ஒற்றுமையை நிலை நாட்டுவதற்காக

முயற்சி செய்யட்டுமாக! இவர்கள் இன்ன பிரிவினர்; அவர்கள் இன்ன பிரிவினர் என்பதற்காக நாங்கள் அவர்களுக்கு உதவி செய்வதில்லை என்பது தவறு. அனைத்து நாடுகளும் அபாயத்தில் இருக்கின்றன. ஏனென்றால் இஸ்லாத்தின் மறுப்பாளர்கள் அனைவரும் ஒரு கூட்டமாக ஆகிவிட்டனர். மேலும் இப்போது முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக ஆகவேண்டியது வரும். அப்போதுதான் அவர்கள் தப்பிக்க முடியும். அதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. அல்லாஹ் ஒவ்வொரு குற்றமற்றவரையும், அநீதிக்குள்ளானவர்களையும் மிகப்பெரிய நஷ்டத்திலிருந்து காப்பாற்றுவானாக! மேலும் நாம் துஆவின் பக்கம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

**அஹ்மதிய்யா இயக்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்**

இந்த இறை இயக்கத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளை விவரித்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் கூறிய இந்த விஷயங்கள்தான் இந்த இயக்கத்தை நிறுவுவதற்கான நோக்கமாகும். அதற்காக நாம் தியாகங்களை செய்ய வேண்டும். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் அறிவிப்பு செய்துள்ளார்கள். இந்த விஷயங்கள் தியாகத்தை விரும்புகின்றது. நான் கூறியதுபோன்று, தியாகங்களின் சம்பவங்களை படித்துவிடுவதால் மட்டும் எந்தவொரு புரட்சியையும் ஏற்படுத்த முடியாது. அதற்காக ஒவ்வோர் அஹ்மதிப் பெண்ணும் ஹாஜிராவாக மாற வேண்டும். மேலும் ஒவ்வோர் அஹ்மதி இளைஞனும் இஸ்மாயீலாக மாற வேண்டும். ஒவ்வொரு நாட்டையும், சமுதாயத்தையும், மற்றும் இனத்தையும் சார்ந்த ஒவ்வோர் அஹ்மதியும் இந்த படித்தரத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அப்போதுதான் நாம் உலகில் ஓர் அளவிற்காவது ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

(குத்பா ஜுமுஆ ஜுலை 31, 2020)

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அல்காமிஸ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதிய்யா கிலாஃபத் நூற்றாண்டையொட்டி உலகளாவிய அஹ்மதிகளுக்கு ஓர் அறிவார்ந்த தூதுச் செய்தியை வழங்கினார்கள். அதில் அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

இது இறைவனின் நியதியாகும். இது ஒருபோதும் பொய்யான வாக்குறுதிகளை கூறாத அதே இறைவனின் வாக்குறுதியாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைக்கேற்ப இறைவனின் இரண்டாவது வல்லமையுடன் பிணைந்திருக்கின்ற அந்த அன்பிற்குரியவர்களே உலகில் வெற்றி பெறப்போகின்றார்கள். ஏனென்றால் இறைவன் அவர்களுடன் இருக்கின்றான். இறைவன் நம்மோடு இருக்கின்றான். இன்று இறைவனின் இந்த வல்லமை வெளிப்பட்டு நூறு ஆண்டுகளாகின்றன. நான் ஜமாஅத்தின் சுருக்கமான வரலாற்றை கூறியதுபோன்று ஒவ்வொரு நாளும் புதிய மகிமையுடன் நாம் இந்த வாக்குறுதி நிறைவேறுவதை காண்கின்றோம்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பிரச்சாரத்தை இறைவனின் இரண்டாவது வல்லமையுடன் இணைந்திருந்தவாறு தமது எல்லா ஆற்றல்களுடன் அதை நிறைவடைய செய்ய வேண்டியது ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாகும். இன்று இந்த முஹம்மதிய மஸீஹின் பிரச்சாரத்தை உலகில் நிலை பெறச் செய்து எல்லோரையும் ஒற்றுமையின் சரடில் ஒன்றாக கோர்ப்பது முழுக்க, முழுக்க அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைந்திருப்பதன் மூலமே ஏற்படும். இதன் மூலமே இறைவனை சார்ந்து இருப்பவர்கள் உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவார்கள். அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிக்கும் வலுவான ஈமானுடன், இந்த அழகிய உண்மையை உலகில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் எட்ட வைப்பதற்கான நல் வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்.

**அஹ்மதிகளிடம் உரை**

சமுதாய ஒற்றுமை தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எண்ணற்ற முறை அஹ்மதிகளுக்கு குறிப்பான விஷயங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள் கீழே அந்த வழிகாட்டல்களில் சில முக்கியமான அறிவுரையை சமர்ப்பிக்கின்றோம்:

**ஜமாஅத்தும் ஒற்றுமையும்**

ஒரே ஜமாஅத்தாக இருப்பதில் உள்ள இறையருள் இதுவே ஆகும். அதாவது ஒற்றுமை நிலவுகின்றது; ஒருமைப்பாடு நிலவுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வருகையின் நோக்கம் இதுவே ஆகும். மேலும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் வருகையின் நோக்கமும் முஸ்லிம்களை ஒரே கையில் ஒன்றிணைப்பதும், ஒரே உம்மத்தாக உருவாக்குவதுமே ஆகும். (ஜுமுஆ உரை அக்டோபர் 26, 2018)

**ஜமாஅத்தும்&ஒருமைப்பாடும்**

அல்லாஹ்வின் கை ஜமாஅத்தின் மீது உள்ளது. இந்த விஷயமே நமக்கு ஹஸ்ரத் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வழிகாட்டல்களிலும் கிடைக்கின்றது. எதுவரை இந்த ஒருமைப்பாடு நிலைபெறாதவரை இறைவனும் கிடைக்க மாட்டான்; மற்ற வெற்றிகளும் கிடைக்காது. எவர்களிடம் ஒருமைப்பாடு காணப்படுகின்றதோ அவர்களிடம் தான் ஏகத்துவத்தினுடைய உண்மையான புரிதலும் இருக்கும். மேலும் இறைவனும் அப்படிப்பட்ட மக்களுக்கு தான் கிடைப்பான்.

(ஜுமுஆ உரை அக்டோபர் 5, 2014)

ஜமாஅத்தான தொழுகை மற்றும் ஒற்றுமை

ஒருவர் மற்றவருடன் இணையும் போது அதற்கான தாக்கம் கண்டிப்பாக ஏற்படும். இது எவர்கள் முற்றிலும் ஈமானில் பலவீனமாக இருக்கின்றார்களோ அவர்களுக்கானதாகும். ஆனால் உண்மையான ஈமான் இதுவே ஆகும். அதாவது ஐவேளைத் தொழுகைகளுக்காக பள்ளிவாசலுக்கு செல்லுங்கள். அல்லாஹ் உங்களுக்கு பள்ளிவாசலை வழங்கி இருக்கின்ற நிலையில் நீங்கள் அனைவரும்

ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டிற்கான காட்சியையும் இங்கு வெளிப்படுத்த வேண்டும்.
(ஜுமுஆ உரை அக்டோபர் 11, 2019)

இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை அனுப்பியுள்ளான். நாம் இறை வணக்கங்கள் மற்றும் தொழுகைகளில் உண்மையான புரிதலை பெறுவதன் பக்கம் அன்னார் (அலை) நமக்கு கவனமூட்டியுளாளார்கள்.

எனவே நம்முடைய ஆன்மீக நிலையை சிறந்த முறையில் ஆக்குவதற்காகவும் ஒற்றுமையை நிலை பெற செய்வதற்காகவும் எம்பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பது நமது வாதமாக இருக்கிறது.
(ஜுமுஆ உரை ஜனவரி 20, 2017)

**ஷூராவின் அமைப்பு**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில விஷயங்களில் ஆலோசனை பெறுவது உண்மையில் நம்மை சரியான திசையில் வழிநடத்துவதற்காகவும் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையுடன் பணியை மேற்கொள்வதன் பக்கம் வழிகாட்டுவதற்காகவும் ஆகும். மேலும், உம்மத்தில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்காகவும் ஆகும்.
(ஜுமுஆ உரை மே 12, 2023)

நல்ல தீர்மானமும் ஒருமைப்பாடும்

'நல்ல தீர்மானங்களை விளக்குவது என்பது எந்தவொரு தனி நபரின் பணியும் அல்ல. எது திருக்குர்ஆனுக்கு ஏற்ப இருக்குமோ; எது சுன்னத்திற்கேற்ப இருக்குமோ, எது ஹதீஸுக்கு ஏற்ப இருக்குமோ, மேலும் இக்காலத்தில் நீதி நெறி தீர்ப்பவரின் கட்டளைகளுக்கு ஏற்ப இருக்குமோ அதுவே நல்ல தீர்மானம் ஆகும். மேலும் இந்த வழிமுறையின் படிதான் ஜமாஅத்தின் ஒற்றுமை நிலை பெற முடியும். இந்த நோக்கத்திற்காகதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அனுப்பப்பட்டார்கள். அதாவது, ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும்; தூய மற்றும் கட்டுப்படுகின்ற மக்களின் ஒரு ஜமாஅத்தை உருவாக்க வேண்டும்; என்ற இந்த நோக்கத்திற்காகவே அன்னார் அனுப்பப்பட்டுள்ளார்கள்.
(ஜுமுஆ உரை நவம்பர் 2, 2018)

பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் அவசியமாகும்

சமுதாய ஒருமைப்பாட்டில் பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய பங்கு உண்டு. எனவே இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அறிவுரையானது ஓர் அடிப்படை வழிகாட்டலாக இருக்கின்றது.

அன்னார் கூறுகிறார்கள்:

இந்நிலையானது இங்கு மட்டுமல்ல; அமெரிக்காவிலும், முழு உலகிலும் இருக்கின்றது. எவ்வாறிருப்பினும், நான் கூறியதுபோன்று இயற்கையின் விதி மீண்டும் செயல்பட ஆரம்பித்து விட்டது. ஒரு குறிப்பிட்ட வரம்பை அடைந்து, கடனைத் திருப்பிச் செலுத்தும் மக்களின் திறன் முடிவடைந்த போது, கடனில் இருப்பது நம் சொந்தப் பணம் அல்ல; அது மற்றவர்களின் பணமாகும் என்பதை வங்கிகள் உணர்ந்தன. பின்னர் அவர்கள் அதிகப்படியான கடன் கொடுப்பதை நிறுத்தினர். மேலும் இந்த உற்பத்தி சாரா நோக்கங்களுக்கான கடனைக் கொடுப்பதை நிறுத்தியது மட்டுமல்லாமல், உற்பத்தி சார்ந்த நோக்கங்களுக்காக கடன் கொடுப்பதையும் நிறுத்தினர். இதன் விளைவாக முழு பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது, மேலும் நாடுகளின் பொருளாதாரங்கள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதால், முழு உலகமும் இந்தப் பிடியில் சிக்கியது.'

அன்னார் உலகிற்கு அறிவுறுத்தினார்கள்:

எனவே, உலகில் பொருளாதார நெருக்கடியின் வடிவத்தில் நாம் காணும் இவை அனைத்திற்கும் உண்மையான காரணம், என்ன என்பதை தற்போது வரை அவர்கள் சிந்திக்க தொடங்கவில்லை. அதன் காரணம் எல்லா ஆற்றல்களின் எஜமானனும், உணவளிப்பவனுமாகிய இறைவனை அவர்கள் உண்மையான முறையில் ஏற்கவில்லை அல்லது ஏற்க வேண்டிய முறையில் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவும் ஏற்றுக் கொள்ளாததற்கு சமமே ஆகும். இந்த ஆற்றல்கள் அல்லது நாடுகள் பொருளாதார ரீதியில் மிகவும் உறுதியாக இருக்கின்றன அல்லது சிறிது காலம் வரை உறுதியாக இருந்தன. வானங்கள் பூமியை படைத்த இறைவனது சட்டம் ஒன்று உலகில் செயல்பட்டு வருவதன் பக்கம் இவர்கள் சிறிதும் கவனம் செலுத்துவதில்லை.'

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: "இந்த நேரத்தில், இந்த அனைத்து பேரழிவுகள் மற்றும் நெருக்கடிகளுக்கும் உண்மையான காரணம் எல்லாம் வல்ல இறைவனிடமிருந்து விலகி தொலைவில் இருப்பதுதான் என்பதை உலகிற்கு உணர்த்துவது அஹ்மதிகளாகிய நம் பொறுப்பாகும். அடியார்களின் உரிமைகளை செலுத்துவதில் கவனமின்மையும், மற்றவர்களின் வளங்களின் மீது பேராசை கொண்ட பார்வை வைப்பதும் அதற்கான காரணங்களாகும். எனவே ஒரு நிரந்தர தீர்வை விரும்பினால், இவற்றைப் பற்றி சிந்திக்க வேண்டும். பல பில்லியன் டாலர் அல்லது பல பில்லியன் பவுண்டுகள் (Bail out) பிணையெடுப்பு செய்தலோ அல்லது செலவழித்தலோ, அல்லது நிவாரண உதவிகள் செய்வதோ நிரந்தர தீர்வு கிடையாது. ஏனென்றால் சற்று சிந்தித்துப் பார்த்தால், அந்தத் தொகை கூட யாருக்கு நஷ்டம் ஏற்பட்டதோ அவர்களின் பையில் இருந்து எடுக்கப்பட்டது தான். இன்றைய முஸ்லிம் நாடுகளிலும் இதே நிலைதான் உள்ளது. அவர்களும் இறைவன் திருக்குர்ஆனில் அவர்களுக்கு வழிகாட்டிய வாழ்க்கை முறையை விடுத்து உலகத்தின் பொருளாதார அமைப்பை நோக்கி செல்கின்றனர்.

மேலும் அன்னார் கூறுகிறார்கள்; 'ஆனால் அதற்காக எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவனுடைய மஸீஹ் மற்றும் மஹ்தியின் மூலமாக நம் வரை எட்டச் செய்த அந்தக் கூற்றையும் கேட்க வேண்டும். அதுவன்றி இக்காலத்தில் எந்தவோர் ஈடேற்றமும் இல்லை; எந்தவொரு பாதுகாப்பும் இல்லை; எந்வொரு உத்தரவாதமும் இல்லை.'

இந்த ஒளியின் வட்டத்திற்குள் வருவதற்கான நற்பேறை அல்லாஹ் உலகிற்கு வழங்கட்டுமாக!

அப்போதுதான் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாததன் காரணத்தால் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பத்திலிருந்து தப்பிக்க முடியும். தற்போது இறைவனை அறிமுகப்படுத்திக் கொடுப்பதற்கும், அவனை சென்று அடைவதற்குமான இதுவே ஒரே வழியாகும். அதாவது, மனிதனை இறைவனுடைய உண்மையான அடியாராக ஆக்கிவிடும் வழிமுறையாகும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையாக மற்றும் சரியாக கட்டுப்படக் கூடியவராக ஆக்கிவிடும் வழிமுறையாகும். அல்லாஹ் உலகத்திற்கு இந்த முக்கியமான அடிப்படை விஷயங்களை புரிவதற்கான நற்பேறை வழங்குவானாக.! (ஜுமுஆ குத்பா அக்டோபர் 31, 2008)

கிலாஃபத் தான் சமுதாய ஒற்றுமைக்கான உத்திரவாதம்

அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமுதாய ஒற்றுமை தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்: 'தூதருக்கு கட்டுப்படுதலின் ஒரு நோக்கம் கூட ஒற்றுமையின் சரடில் ஒன்றாக கோர்ப்பது ஆகும். கிலாஃபத் இன்றி அதுவும் சாத்தியம் இல்லை. பிற முஸ்லிம்கள் தொழுகைகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனாலும் ஓர் ஒற்றுமை இல்லாத காரணத்தினால் அவர்களின் உள்ளங்களில் பிளவு இருக்கின்றது. ஒரே கொள்கையில் இருந்தும் பல பிரிவுகளாக பிரிந்திருக்கின்றார்கள். உலமாக்கள் தங்களுடைய சுயநலத்திற்காகவும் தங்களுடைய நோக்கங்களுக்காகவும்-தற்போது பாகிஸ்தானிலோ உலமாக்களின் நோக்கம் அரசியல் நோக்கங்களாக மாறிவிட்டது. ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டு கொண்டிருக்கின்றனர். அவர்களை பின்பற்றக் கூடியவர்களின் நிலையும் இதுவே ஆகும்.
(ஜுமுஆ குத்பா மே 25, 2018)

எல்லாம் வல்ல அல்லாஹ் அஹ்மதிகளின் மீது செய்த ஒரு மாபெரும் பேருபகாரம் என்னவென்றால், நேர்வழி காட்டியான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத்தில் இணைவதற்கான நற்பேறு மட்டும் நமக்கு கிடைக்கவில்லை; மாறாக இக்காலத்தில் மஹ்தி மற்றும் மஸீஹ் அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்கான நற்பேறையும் அவன் நமக்கு வழங்கியுள்ளான். அதில் ஓர் அமைப்பு இருக்கின்றது, அதில் கிலாஃபத் அமைப்பு இருக்கிறது, உங்கள் கையில் எப்படிப்பட்ட ஒரு வலிமை வாய்ந்த காப்பு இருக்கிறது என்றால் அது உடைவது ஒருபோதும் சாத்தியமில்லை. இதை நினைவில் கொள்ளுங்கள்! இந்தக் காப்பு உடையக்கூடியது அல்ல; ஆனால் நீங்கள் உங்கள் கைகளை சற்று தளரச் செய்தீர்கள் என்றால் உங்களுடைய காப்பு உடைவதற்கான சாத்தியக் கூறு உருவாகிவிடும். அல்லாஹ் ஒவ்வொருவரையும் இதிலிருந்து காப்பாற்றுவானாக! ஆகவே அல்லாஹ்வினுடைய கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; மேலும் ஜமாஅத் அமைப்புடன் எப்போதும் இணைந்ததே இருங்கள் என்ற இந்தக் கட்டளையை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஏனென்றால் தற்போது கிலாஃபத் இன்றி உங்களின் வாழ்வு எஞ்சி இருக்க முடியாது. (அல்ஃபஸல் இன்டர்நேஷனல் அக்டோபர் 17, 2003)

சர்வதேச ஒற்றுமை

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலக அளவில் 'National Peace Symposium' 'தேசிய அமைதி கருத்தரங்கை' நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள். மேலும் மதங்களுக்கு இடையேயான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்காக 'Pathway to Peace" 'அமைதிக்கான வழி' போன்ற உலகளாவிய பிரச்சாரங்களைத் தொடங்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, அன்னாரின் ஆழிய கருத்து நிறைந்த "உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்" என்ற புத்தகம் பல்வேறு நாடுகளின் நாடாளுமன்றங்களிலும், அரசாங்க அவைகளிலும் அன்னார் ஆற்றிய உரைகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு அன்னார் அனுப்பிய கடிதங்களும் மற்றும் சந்திப்புகளின் விவரங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த நூலானது சமுதாய ஒற்றுமை தொடர்பான ஐந்தாவது கிலாஃபத்தின் முயற்சிகளுக்கு சான்று பகரும் மிகச் சிறந்த படைப்பாகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த உலகளாவிய ஒற்றுமையையும் ஒருவர் மற்றும் மற்றவர்கள் மீது கொண்டுள்ள பரஸ்பர அன்பைக் குறித்து அது இறை உதவியின் அடையாளம் என்று குறிப்பிட்டவாறு ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார்கள்:

இப்போது, இந்த தொலைதூரப் பகுதிகளில் வெவ்வேறு நாடுகளில் வாழும் அஹ்மதியர்கள், வெவ்வேறு தேசங்கள், வெவ்வேறு இனங்களாக இருக்கின்றவர்களை கலீஃபாவுடன் தொடர்பை ஏற்படுத்துபவர் யார் நிச்சயமாக இது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உதவியும் ஒத்தாசையும் ஆகும், அவ்வாறு இல்லையெனில் மனித சிந்தனை அதை உள்ளடக்க முடியாது... உலக மக்களால் இதைப் புரிந்து கொள்ள முடியாது. ஜெர்மனியில் ஒரு அரேபியர் பைஅத் செய்ததும் அவருடைய அன்பர் அவரிடம், 'நீங்கள் காதியானியாகிவிட்டீர்களா?' என்று கேட்டார். அதற்கு அந்த புதிதாக பைஅத் செய்த நபர் , 'நீங்கள் இங்கே நூறு அரேபியர்கள் இருக்கின்றீர்கள் நீங்கள் எதிலும் ஒன்று சேர முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஒரு இமாம் இருக்கிறார், ஜமாஅத் அவரது உத்தரவின் பேரில் நிற்கிறது அமர்கிறது, இதனால்தான் அவருடைய செய◌ல் இதை அருள் இருக்கிறது. எனவே தற்போது நான் அவர்களை விட்டுவிட்டு உங்களுடன் இணைவதற்கு என்ன சிறப்பு தன்மை இருக்கிறது என்பதை கூறுங்கள்.'
(ஜுமுஆ உரை, மே 27, 2022)

தமிழாக்கம்
மவ்லவி
அபுல் ஹஸன்

* * * * * * * * *

# இஸ்லாத்தில் நீதிக்கான போதனைகள்

(மவ்லவி முஹம்மது ஆரிஃப் ரப்பானி)

உண்மை என்னவென்றால், அமைதி மற்றும் நீதியை ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. அவை இரண்டும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவையாகும். இது எப்படிப்பட்ட விதிமுறை என்றால் இதனை உலகின் அனைத்து அறிவார்ந்த மக்களும், பகுத்தறிவுவாதிகளும் புரிந்து கொள்கின்றனர். உண்மையில், ஒரு நாட்டில் அல்லது உலகில் நீதி நிலைபெற்ற பிறகு குழப்பம் ஏற்பட முடியும் என்பதை குழப்பவாதிகளை தவிர வேறு எவரும் கூற முடியாது. ஆனால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் அமைதியின்மையும், குழப்பமும் நமக்குத் தென்படுகின்றது. இந்த அமைதியின்மை மற்றும் குழப்பம் பல்வேறு நாடுகளில் உள்நாட்டு அளவில் காணப்படுகின்றது. மேலும் பல்வேறு சமுதாயங்களுடனான தொடர்புகளின் அடிப்படையில் வெளிப்புற அளவிலும் நிலவுகின்றது. உண்மையில் அரசாங்கங்கள் நீதியின் அடிப்படையிலான பாலிஸிகளை உருவாக்குவதாக வாதம் செய்கின்றன. அமைதியை நிலைநாட்டுவதை அனைவரும் தமது முதன்மை நோக்கமாக கூறுகின்றனர் என்ற போதிலும், பொதுவாக உலகில் நிம்மதியின்மையும், பரிதவிப்பும் அதிகரித்து வருகின்றது. மேலும் குழப்பம் பரவிக் கொண்டிருக்கின்றது என்பதில் எந்த ஐயமும் இல்லை.| இதிலிருந்து எங்கோ நீதியின் எதிர்பார்ப்புகள் சேதப்படுத்தப்படுகின்றன என்பது உறுதியாகின்றது. எப்போது எங்கு அநீதியின்மை காணப்பட்டாலும் அங்கு அது தீர்க்கப்பட வேண்டும் என்பது உடனடி தேவையாகும். (உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும் பக்கம் 72)

இஸ்லாமிய போதனைகளில் நீதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்பட்டுள்ளது. அதனை நிலைநிறுத்துவதற்கு மிகவும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் நீதியின் வட்டம் மிகவும் எல்லையற்றதாகும். மேலும் அது தனி நபர் முதல் சமூகம் வரை இன்னும் கூறப்போனால், முழு மனிதகுலம் வரையிலும் பரவி இருக்கின்றது. இது எப்படிப்பட்ட பண்பு என்றால் இதனுடன் பிரபஞ்சத்தின் இறைவனின் பண்பு இணைந்திருக்கின்றது. அதாவது அந்த இறைவன் நீதிமான் ஆவான். மேலும் நீதியை விரும்புகின்றான். திருக்குர்ஆனில் والله يقضى بالحق என்று வல்ல இறைவன் கூறியுள்ளான். அல்லாஹ் ஒவ்வொரு விஷயத்தையும் உண்மையுடனும், நேர்மையுடனும், நீதியுடனும் தீர்ப்பளிக்கின்றான். இதேபோன்று, இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது அனைத்து விவகாரங்களிலும் நீதி மற்றும் நேர்மையை பேணுமாறு அல்லாஹ் கட்டளை வழங்கியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான்:

وَإِنْ حَكَمْتَ فَاحْكُم بَيْنَهُم بِالْقِسْطِ ۚ
إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُقْسِطِينَ

பொருள்: பொய்யர்களும், தீயவர்களும் உம்மிடத்தில் ஏதாவது விவகாரத்தை எடுத்துக் கொண்டு வந்தால், பின்னர் நீர் தீர்ப்பளிக்கும்போது நீர் எமது இந்த அறிவுரையை நினைவில் கொள்வீராக! அவர்களுக்கிடையில் நீதியுடன் தீர்ப்பளிப்பீராக! அல்லாஹ் நிச்சயமாக நீதியுடன் நடப்பவர்களிடம் நேசம் கொள்கின்றான்.(அல்மாயிதா: 43)

அடுத்து, அதில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து

وَأُمِرْتُ لِأَعْدِلَ بَيْنَكُمُ.

என்ற விஷயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (அஷ்ஷூவ்ரா: 16)

பொருள்: நான் உங்களுக்கிடையில் நீதியுடன் விவகாரங்களை தீர்க்க வேண்டும் என்று எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.

இந்த திருக்குர்ஆன் வழிகாட்டல்களின் ஒளியில் நமது எஜமானர் மற்றும் தலைவர் ஹஸ்ரத் அக்தஸ் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் ஒவ்வோர் அடியிலும், ஒவ்வொரு நபருடனும் நீதியுடன் நடந்துள்ளார்கள். நீதியுடன் நடப்பதற்கு வலியுறுத்த மட்டும் செய்யவில்லை. மாறாக தமது வாழ்நாள் முழுவதும் அதன் செயல் வடிவத்தை முன்வைத்தவாறு தமது சமுதாயத்திற்கு நீதியை கற்றுத் கொடுத்துள்ளார்கள். ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எந்த நாளன்று அல்லாஹ்வின் கருணையின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் இருக்காதோ, அந்த நாளன்று அல்லாஹ் ஏழு நபர்களுக்கு தனது கருணையின் நிழலில் இடம் அளிப்பான். அந்த நற்பெயர் பெற்ற நபர்களை குறிப்பிட்டவாறு, எல்லாரையும் விட முதன்முதலில் இடம் பெறக்கூடிய நீதியுடன் தீர்ப்பளிக்கும் இமாம் என்ற பெயரையே ஹுஸூர் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த விஷயத்திலிருந்து ஹுஸூர் (ஸல்) அவர்களின் பார்வையில் நீதிக்கு எந்த அளவு முக்கியத்துவம் இருந்தது என்பதை மிகத் தெளிவாக அனுமானிக்க முடிகிறது. (ஸஹீஹ் முஸ்லிம்)

நீதி மற்றும் நேர்மை என்ற பண்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூய இயல்பின் கட்டாய அங்கமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதம் செய்திருக்காத அந்த தருணத்திலும் கூட அது ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. ஆக அறிவிப்பில் வருகின்றது. அறிவீனமான காலக்கட்டத்தில் கஅபத்துல்லாஹ் கட்டப்பட்டது, அப்போது அவரும் அதில் பங்கு பெற்றிருந்தார். இதற்கிடையில் ஹஜ்ரே அஸ்வதை அதனுடைய இடத்தில் வைப்பதற்கான சந்தர்ப்பம் வந்தபோது, குறைஷியக்



கோத்திரங்கள் தங்களுக்குள் சண்டையிட்டனர். அதாவது அந்தக் கல்லை அதனுடைய இடத்தில் நாங்களே வைப்போம் என்று சண்டையிட்டனர். இறுதியில் மூன்றாம் நபரின் தீர்ப்பின் அடிப்படையில் ஒருமித்த கருத்து ஏற்பட்டது. அதாவது எந்த நபர் காலையில் முதன் முதலில் வருவாரோ அவர் நடுவராக இருப்பார். காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். எனவே அனைவரும் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) வந்துவிட்டார்; நம்பிக்கைக்குரியவர் வந்துவிட்டார் என்று கூறினார். மேலும் அன்னாருக்கு முன்னால் விவகாரம் வைக்கப்பட்டது. அன்னார் (ஸல்) ஹஜ்ரே அஸ்வதை ஒரு துணியில் வைக்கும்படி கூறினார்கள். மேலும் குறைஷிகளின் பல்வேறு கோத்திரங்களின் தலைவர்கள் பிரதிநிதிகளை அழைத்தார்கள். அவர்கள் அந்தத் துணியின் எல்லா முனையையும் பிடித்துக் கொண்டார்கள். மேலும் அதனை அதன் இடத்திற்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் ஹுஸுர் (ஸல்) அவர்கள் ஹஜ்ரே அஸ்வதை எடுத்து தூக்கி அதன் அசல் இடத்தில் வைத்து விட்டார்கள். (முஸ்னத் அஹ்மது, தொகுதி 3, பக்கம் 46, பெய்ரூத் பதிப்பு)

எனவே இந்த அறிவிப்புகளிலிருந்து இந்த விஷயம் தெளிவாகின்றது. அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்கள் படைப்பினங்களில் எல்லோரையும் விட அதிகம் நீதியுடன் நடக்கக் கூடியவராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) மனித வாழ்க்கையின் எல்லா துறையிலும் வெறும் நீதியுடன் நடப்பதற்கு மட்டும் அறிவுரை வழங்கவில்லை; மாறாக அதன் சிறந்த முன்மாதிரிகளையும் அன்னார் (ஸல்) நிலைநாட்டியுள்ளார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் பரிசுத்த ஆற்றல்களின் தாக்கம் இவ்வாறாக இருந்தது. அதாவது குலஃபாயே ராஷிதீன் மற்றும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் எத்தகைய சமூகம், பொருளாதாரம், அரசியல், சமுதாயம் போன்றவற்றின் அடிப்படையிலான உலகளாவிய நீதியின் அமைப்பை முழு உலக மனித குலத்திற்கு முன்னால் வைத்துள்ளார்களோ அதைப் போன்ற மற்றும் அதற்கு நிகரான உதாரணம் உலகில் எங்கும் கிடைப்பதில்லை.

## இஸ்லாத்தின் மறுமலர்ச்சியும் நீதியை நிலைநாட்டுதலும்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பிறகு தனது சமுதாயம் வழி தவறி விடும் என்ற செய்தியும் வழங்கியிருந்தார்கள். எனினும் அத்துடன் இந்த நற்செய்தியும் வழங்கியிருந்தார்கள். அதாவது இருள் சூழ்ந்த அந்த நேரத்தில் எனது மஹ்தி தோன்றுவார்; மேலும் அவர் இந்த உம்மத்தை சீர்படுத்தக்கூடிய பொறுப்பை ஏற்றுக் கொள்வார்; அந்த இமாம் மஹ்திக்கு குறிப்பாக நீதி நெறி தீர்ப்பவர் என்ற பண்பையும் அன்னார் (ஸல்) எடுத்துரைத்திருந்தார்கள். இந்த முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப 14 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் தாம் இமாம் மஹ்தியாக வந்திருக்கின்றேன் என்ற வாதத்தை முன் வைத்தார்கள். மேலும் ஏனைய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நீதியையும் நிலை நாட்டினார்கள்.

இது தொடர்பாக அன்னார் (அலை) இந்த அளவிற்கு கூறியுள்ளார்கள்: அதாவது அல்லாஹ் சில நேரத்தில் கலிமா கூறக்கூடிய அநீதியாளருக்கு எதிரில் நீதியை விரும்பக்கூடிய நிராகரிப்பாளரை நேசிக்கின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 249 அடிக்குறிப்பு)

இதேபோன்று அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அனைத்து ஆற்றல்களின் அரசன் நீதி ஆகும். இந்த ஆற்றலில் இருந்தே மனிதன் இழப்பிற்குரியவனாக இருப்பானேயானால், பின்னர் அவன் எல்லாவற்றிலிருந்தும் இழப்பிற்குரியவனாக இருக்க நேரிடும். (மல்ஃபூஸாத்தொகுதி 3 பக்கம் 34)

மற்றோர் இடத்தில் கூறினார்கள்:

இறைவனுக்கு எவருடனும் எந்த பௌதீக உறவும் இல்லை என்பது முற்றிலும் உண்மையான விஷயமாகும். இறைவன் சுயமே நீதிமானாக இருக்கின்றான். மேலும் நீதியை நேசிக்கின்றான். மேலும் அவன் சுயமே நீதிமான் ஆவான். அத்துடன் அவன் நீதியை நேசிக்கின்றான். எனவே வெளிப்படையான உறவை அவன் பொருட்படுத்துவதில்லை. அவன் இறையச்சமுடையவருக்கு மதிப்பளிக்கின்றான். அவரை அவன் தனது அருளால் பாதுகாக்கின்றான். மேலும் அவருக்கு உதவி செய்கின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 310 2010-ம் ஆண்டு பதிப்பு)

இதேபோன்று அன்னாருடைய மற்றொரு வழிகாட்டல் உள்ளது. அதாவது எந்த அளவிற்கு ஒரு நபர் நீதியை மேற்கொள்கின்றாரோ அதே அளவிற்கு அவர் தெளிவான மனசாட்சி கொண்டவராகவும் இருக்கின்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 531 2010 ஆம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வெறும் அறிவுரை மட்டும் செய்யவில்லை. மாறாக நீதியுடனும், உண்மையுடனும் சாட்சியம் வழங்குதலுக்கான சிறந்த முன்னுதாரணங்களையும் முன் வைத்துள்ளார்கள். இது தொடர்பான சம்பவங்கள் அன்னார் (அலை),தாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக வந்திருக்கின்றேன் என்ற வாதத்தை முன்வைத்த பிறகுள்ள வாழ்க்கையிலும் வெளிப்பட்டன. இன்னும் கூறப்போனால், இறைவனின் புறமிருந்து தோன்றக் கூடிய ஒருவரின் உண்மைத்துவத்திற்கு சாட்சியமாக இருக்கக்கூடிய முந்தைய வாழ்க்கையிலும் கூட அப்படிப்பட்ட சம்பவங்கள் கிடைக்கின்றன. திருக்குர்ஆன் போதனைகளுக்கு ஏற்ப எப்போதும் நீதியுடன் உண்மையான சாட்சிக்காக நின்றார்கள். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

எந்த நபரை நாம் இமாமாக ஒப்புக்கொண்டுள்ளோமோ அவர் திருக்குர்ஆன் கட்டளைகளின்படி நடந்தவாறு, எப்படிப்பட்ட முன்னுதாரணங்களை நிலைநாட்டியுள்ளார் என்றால், அது



அந்நியர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுகின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வாதம் புரிவதற்கு நெடுங்காலம் முன்பு அன்னாரின் இளமைக்காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் அறிவிப்புகளில் வருகின்றது:

ஒருமுறை தமது தந்தையாருக்கு எதிரான ஒரு வழக்கில் அன்னார் (அலை) ஆஜரானார்கள். மேலும் உண்மை மற்றும் நீதியின் எதிர்பார்ப்புகளை முழுமை செய்தவாறு, அன்னார் (அலை) உண்மையை கூறினார்கள். அதன் பயன் எதிர் தரப்பிற்கு கிடைத்தது. மேலும் அன்னாருடைய தந்தையாருக்கு பாதிப்பு ஏற்பட்டது. நான் எவ்வாறு கூறுகின்றேனோ அவ்வாறுதான் சாட்சியம் வழங்க வேண்டும்; இல்லையென்றால் பாதிப்பு ஏற்படும் என்று அன்னாரிடம் அன்னாரின் வக்கீல் முன்னரே கூறியிருந்தார். அன்னார் (அலை) கூறினார்கள்:

என்ன நேர்ந்தாலும் எது உண்மையான விஷயமோ அதனையே நான் கூறுவேன். எவ்வாறு இருப்பினும் நீதிபதி எதிர் தரப்பிற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கி விட்டார் மேலும் வழக்கை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர். வழக்கில் தோற்றப் பிறகும், தமக்கு எதிராக தீர்ப்பு வந்த பிறகும் அன்னார் (அலை) நீதிமன்றத்திலிருந்து எந்த அளவிற்கு மகிழ்ச்சியுடன் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள் என்றால், மக்களில் எவருக்கு அந்தத் தீர்ப்பைப் பற்றி தெரியாதோ அவர், அநேகமாக அன்னார் (அலை) வழக்கில் வெற்றி பெற்று திரும்பி வந்து கொண்டிருக்கின்றார்கள் என்று கருதினார். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி ஒன்று பக்கம் 72- 73 அய்னா கமாலாத்தே இஸ்லாம், தொகுதி 5 பக்கம் 298).

நீதி தொடர்பாக, மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை முதல் பரந்துபட்ட மனித சமூகம் மற்றும் சர்வதேச விவகாரங்கள் வரையிலும் இஸ்லாம் எப்படிப்பட்ட போதனைகள், வழிமுறைகள் மற்றும் முன்னுதாரணங்களை வழங்கியுள்ளது என்றால் அதற்கு நிகர் உலகில் எங்கும் காணக் கிடைப்பதில்லை. மார்க்கம், சமூகம், பொருளாதாரம் அரசியல், சமுதாயம் மற்றும் சர்வதேசம் என எல்லா அம்சங்களிலும் நீதியை நிலைநாட்டுவதற்கு இஸ்லாம் விரிவான போதனைகளை வழங்கியுள்ளது. திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் பல்வேறு கோணத்தில் இந்தக் கட்டளைக்கான குறிப்பு கிடைக்கின்றது. இவற்றில் நீதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள திருக்குர்ஆனின் சில அடிப்படையான விதிமுறைகளும், வழிகாட்டல்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் நீதி மற்றும் நேர்மை என்ற கருத்து மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பின்னர் இதன் செயல் விளக்கம் இறைத் தூதர் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்கள் ஆகியோரின் வழிகாட்டல்களின் ஒளியிலும் கீழே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது:




**மனித வாழ்வில் அனைத்துத் துறைகளிலும், விவகாரங்களிலும் முழுமையான நீதியை பேணுவது தொடர்பான போதனை**

அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதை நோக்கமாக கொள்வதுதான் உலகில் நீதியை நிலைபெற செய்வதற்கான ஒரே வழிமுறையாகும்.

ஆக இதே விதிமுறையை எடுத்துரைத்தவாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُوۡنُوۡا قَوّٰمِيۡنَ بِالۡقِسۡطِ
شُهَدَآءَ لِلّٰهِ وَلَوۡ عَلٰۤى اَنۡفُسِكُمۡ اَوِ الۡوَالِدَيۡنِ
وَالۡاَقۡرَبِيۡنَۚ اِنۡ يَّكُنۡ غَنِيًّا اَوۡ فَقِيۡرًا فَاللّٰهُ
اَوۡلٰى بِهِمَا فَلَا تَتَّبِعُوا الۡهَوٰٓى اَنۡ تَعۡدِلُوۡا ۚ
وَاِنۡ تَلۡوٗۤا اَوۡ تُعۡرِضُوۡا فَاِنَّ اللّٰهَ
كَانَ بِمَا تَعۡمَلُوۡنَ خَبِيۡرًا‏

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினர்களுக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவர்களாக இருங்கள். யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ அவர் செல்வராயினும், ஏழையாகினும் சரி அல்லாஹ் இருவருக்கும் உங்களை விட அதிக அளவில் நன்மையை விரும்பக் கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள் நீங்கள் உண்மையை மறைத்தாலோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். (4:136)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: உண்மை மற்றும் நீதியில் நிலைத்து நில்லுங்கள். உங்களுடைய ஒவ்வொரு சாட்சியமும் இறைவனுக்காக இருக்கட்டும்! (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்,பக்கம் -361)

மற்றோர் இடத்தில் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு இந்த போதனையை நல்கியுள்ளான். அதாவது நீதி என்பதோ ஓர் எளிய மற்றும் சிறிய அந்தஸ்திலான நன்மையாகும். இன்னும் கூறப்போனால் நீதியைத் தாண்டி கருணையுடன் நடந்து கொள்ளுங்கள் என்று அல்லாஹ் வலியுறுத்தியுள்ளான். அதாவது எவர்கள் உம்முடன் எந்த நன்மையும் செய்திருக்கவில்லையோ அவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். இன்னும் கூறப்போனால் அதனையும் கடந்து, முழுமையான நன்மை செய்யுங்கள்; தாய் தன் குழந்தைக்கு நன்மை செய்வதைப் போன்று நன்மை செய்யுங்கள் என்று இறைவன் கூறியுள்ளான். ஆக, அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ اللّٰهَ يَاۡمُرُ بِالۡعَدۡلِ وَالۡاِحۡسَانِ وَاِيۡتَآئِ ذِى الۡقُرۡبٰى
وَيَنۡهٰى عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡكَرِ وَالۡبَغۡىِۚ
يَعِظُكُمۡ لَعَلَّكُمۡ تَذَكَّرُوۡنَ‏

பொருள்: நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும் உறவினர்களுக்கு கொடுப்பதைப்போல கொடுக்கவும் கட்டளையிடுகின்றான். எல்லா வகை வெட்கக்கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றிலிருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன்

தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். (16:91)

இந்த வசனத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறைவன் உங்களிடம் என்ன விரும்புகின்றான்? அதாவது அவன் நீங்கள் முழு மனித குலத்துடனும் நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே விரும்புகின்றான். பின்னர் அதையும் விட மிகவும் பெரிய விஷயம் இதுவாகும். அதாவது எவர்கள் உங்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லையோ அவர்களுக்கும் நன்மை செய்யுங்கள். பின்னர் அதனை விடவும் பெரிய விஷயம் இதுவாகும். அதாவது நீங்கள் இறை படைப்பினங்களுடன் எப்படிப்பட்ட அனுதாபத்தை மேற்கொள்ள வேண்டும் என்றால், ஒரு வகையில் நீங்கள் அவர்களின் உண்மையான உறவினர்களைப் போன்று ஆகிவிட வேண்டும். தாய்மார்கள் தங்களது பிள்ளைகளிடம் நடந்து கொள்வதைப் போன்று நடந்து கொள்ள வேண்டும். எனவே நன்மைகளுக்கான உச்சபட்ச அந்தஸ்து இயல்பான உத்வேகமாகும். தாயைப் போன்று திகழ்வதாகும். தொகுதி 19 பக்கம் 30)

மேலும் கூறினார்கள்: முழு உலகத்துடனும் நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள் என்று இறைவன் கட்டளை வழங்கியுள்ளான். அதாவது எந்த அளவிற்கு உண்மை இருக்குமோ அதே அளவிற்கு எடுத்துக்கொள்ளுங்கள். மேலும் மனித குலத்துடன் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதையும் தாண்டிய கட்டளை என்னவென்றால், நீங்கள் மனித குலத்துடன் நன்மை செய்யுங்கள். அதாவது எந்த நடைமுறை உங்கள் மீது கடமையாக இருக்காதோ மேலும் வெறும் சலுகையாக இருக்குமோ அவ்வாறு நடந்து கொள்ளுங்கள். நன்மை செய்வதிலும் ஒரு மறைவான குறை இருக்கின்றது. அதாவது நன்மை செய்தவர் ஏதாவது ஒரு தருணத்தில் அதிருப்தியடைந்து தனது நன்மையை நினைவுபடுத்தி விடுகின்றார். எனவே இந்த வசனத்தின் இறுதியில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்: அதாவது முழுமையான நன்மை என்னவென்றால், நீங்கள் உங்களது சக மனிதனுடன் தாய் தனது பிள்ளைக்கு நன்மைகள் செய்வதைப் போன்று, நன்மை செய்ய வேண்டும். ஏனெனில் அந்த நன்மையானது முற்றிலும் இயல்பான உத்வேகத்தின் காரணத்தினால் அமைகின்றதே அன்றி வேறு எந்தவிதமான உள்நோக்கத்துடனும் அமைந்திருப்பதில்லை. இந்தக் குழந்தை இந்த நன்மைக்கு பகரமாக எனக்கு ஏதாவது செய்யும் என்ற எண்ணம் அந்த தாயின் உள்ளத்தில் இருப்பதில்லை. எனவே மனித குலத்துடன் செய்யப்படுகின்ற நன்மையானது முழுமையான அந்தஸ்தை கொண்டதாகும் என்ற சொல்லின் மூலம் இந்த மூன்றாவது அந்தஸ்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (சஷ்மாயே மஃரூஃபத், ரூஹானீ கஸாயீன், 23 பக்கம் 388)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜமாஅத்திற்கு அறிவுரை செய்தவாறு கூறுகின்றார்கள்: நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த பைஅத் உடன்படிக்கையை முழுமை செய்ய வேண்டும் என்றால், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகத்திற்கு எட்ட வைக்க வேண்டும் என்றால், பின்னர் இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஏற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப அனைத்து நற்குணங்களையும் மேற்கொள்ள வேண்டும். நமது சாட்சியங்கள் உண்மை மற்றும் நீதிக்கு ஏற்ப இல்லையென்றால் நமது குடும்பத் தொடர்புகளும், சமூகத் தொடர்புகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைகளுக்கு ஏற்ப இல்லையென்றால், பின்னர் நமது தப்லீஃக் உண்மையான நேர்வழியை எட்ட வைக்கக் கூடிய பிரச்சாரமாக இருக்காது.

எனவே ஒவ்வோர் அஹ்மதியின் மிகப் பெரிய பொறுப்பு என்னவென்றால் அவர் தமது செயலால் தப்லீஃக்கிற்கான பாதையை திறக்க வேண்டும்.(குத்பா ஜுமுஆ நவம்பர் 10, 2017) தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * *

**மார்க்க உலகில் அமைதியின் தூதுவர்**
**11-ம் பக்கத் தொடர்ச்சி.....**

எனவே காஃபிர்கள் அநீதிகளில் இந்த அளவிற்கு எல்லை கடந்து விட்டபோது, இறுதியில் இறைவன் தனது அடியார்கள் மீது கருணை செய்தான். மேலும் தனது தூதர் மீது வஹீ இறக்கினான்.

அநீதி இழைக்கப்பட்டவர்களின் முறையீடு என்னை வந்தடைந்து விட்டது. இன்று நான் அனுமதி வழங்குகின்றேன்; நீரும் அவர்களுக்கு எதிராக போரிடுவீராக. மேலும் நினைவில் கொள்வீராக .எந்த மக்கள் அணி அப்பாவி மக்கள் மீது வாள் ஏந்தினார்களோ அவர்கள் வாளாளேயே அழிக்கப்படுவார்கள். ஆனால் நீங்கள் எவர் மீதும் அநீதி இழைக்காதீர்கள். இறைவன் அநீதி இழைப்பவர்களை நண்பனாக ஆக்கிக் கொள்வதில்லை.

ஆக, இதுதான் இஸ்லாமிய ஜிஹாதின் உண்மைத்துவமாகும். இதனை மிகவும் அநீதியான வடிவில் எடுத்துரைக்கப்படுகின்றது. இஸ்லாம் வாளின் அழுத்தத்தால் பரவியது என்பதை நமது எதிரிகள் எங்கிருந்து செவியுற்றனர் என்று எனக்கு தெரியாது. மார்க்கத்தில் பலவந்தம் கூடாது என்று இறைவனே திருக்குர்ஆனில் கூறியுள்ளான். எனவே இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளில் எந்த கொலைகார மஹ்திக்கும் இடமில்லை; பலவந்தத்திற்கும் இடமில்லை என்பதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகத் தெளிவாக நிரூபணம் செய்து விட்டார்கள் .

தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com




59-வது பிரிட்டன் ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்தின்போது 27 ஜூலை 2025 அன்று நிகழ்ந்த உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியின் ஈமானை வலுவூட்டுகின்ற காட்சி
111 நாடுகளிருந்து 500 சமுதாயங்களைச் சேர்ந்த 2,44,408 நபர்கள் அன்பின் சரடில் கோர்க்கப்பட்டனர்




2025-ஆம் ஆண்டு பிரிட்டன் ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்தில்
ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்திய காட்சி




2025-ஆம் ஆண்டு பிரிட்டன் ஜல்ஸா ஸாலானாவின் ஈமானை வலுவூட்டும் காட்சிகள்

EDITOR
Moulavi O.M.MUZZAMMIL AHMAD
Sub Editor
Moulavi ABDUR RAHMAN TAHIR
Mobile : 8838158410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in
: www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OFTHE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
Qadian - 143516 Distt. Gurdaspur (Pb.) INDIA
Vol. 10 Thursday 18 - 25 - December - 2025 Issue. 51- 52

ACT. MANAGER
ATHAR AHMAD SHAMIM
MOBILE NO. +91-9815639670
e -mail:managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION
Rs. 600/-
(Per Issue : Rs. 12/-)
Weight : 20gm - 50gm/Issue

## இஸ்லாம் அனைத்து வணக்க ஸ்தலங்களின் பாதுகாவலாக இருக்கின்றது

அந்த அனைத்து வணக்க ஸ்தலங்களுக்கும் நானே பாதுகாவலன் ஆவேன் என்பதை வல்ல இறைவன் வெளிப்படுத்துகின்றான். உதாரணமாக நீர் ஒரு கிறிஸ்தவ நாட்டை கைப்பற்றினால் அவர்களின் தேவாலயங்களுக்கு எந்த இடையூறையும் ஏற்படுத்தக் கூடாது; மேலும் அவர்களின் தேவாலயங்களை தகர்ப்பத்திருந்து நீர் அவர்களை தடுத்து விடுவீராக; அவற்றை சேதப்படுத்தக் கூடாது; அவற்றை தகர்க்கக் கூடாது என்பது இஸ்லாத்தின் கடமையாகும். மேலும் இந்த வழிகாட்டல்களே நபிமொழிகளிருந்து புரிய வருகின்றது. ஏனெனில், ஹதீஸ்களிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஒரு சமுதாயத்திற்கு எதிரான போருக்காக இஸ்லாமிய தளபதி ஒருவர் நியமிக்கப்படும்போது, கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் வணக்க ஸ்தலங்களுக்கும், மடாதிபதிகளின் மடங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது என்று அவருக்கு கட்டளை வழங்கப்பட்டது. இதிருந்து இஸ்லாம் எந்த அளவிற்கு பாகுபாடான வழிமுறைகளிருந்து விலகியிருக்கின்றது என்பது வெளிப்படுகின்றது. அதாவது அது மஸ்ஜிதுகளுக்கு காவலாக இருப்பதைப் போன்றே கிறிஸ்தவர்களின் தேவாலயங்கள் மற்றும் யூதர்களின் வணக்க ஸ்தலங்களுக்கும் காவலாக இருக்கின்றது. (சஷ்மாயே மஃரிஃபத், 393 - 394)

## உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களையும் உண்மையாளர்களாக கருத வேண்டும்; இந்த விதிமுறை மிகவும் அன்பும் அமைதியும் வழங்கக் கூடிய மற்றும் சமாதானத்திற்கான அடித்தளம் அமைக்கக் கூடியதாகும்

நாம் உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களையும் உண்மையாளர்களாக கருத வேண்டும் என்ற இந்த விதிமுறையானது மிகவும் அன்பும் அமைதியும் வழங்கக் கூடியதும், சமாதானத்திற்கான அடித்தளம் அமைக்கக் கூடியதும் ஆகும். மேலும் நல்லொழுக்க நிலைகளை மேம்படுத்த உதவக் கூடியதாகும். அதாவது, அவர் இந்துக்களில் வெளிப்பட்டிருந்தாலும் சரியே அல்லது பாரசீகத்திலோ அல்லது சீனாவிலோ அல்லது வேறு எந்த நாட்டில் வெளிப்பட்டிருந்தாலும் சரியே. இறைவன் கோடிக்கணக்கான இதயங்களில் அவர்களின் மீதான கண்ணியத்தையும், மகத்துவத்தையும் ஏற்படுத்தியுள்ளான். மேலும் அவர்களின் மார்க்கத்தின் வேரை நிறுவி விட்டான். பல நூற்றாண்டுகள் வரை அந்த மார்க்கம் தொடர்ந்து வந்துள்ளது. இந்த விதிமுறையையே திருக்குர்ஆன் நமக்கு கற்றுத் தந்துள்ளது. இதே விதிமுறையின் அடிப்படையில் நாம் ஒவ்வொரு மார்க்கத்தின் தலைவரையும் அதாவது எவருடைய வாழ்க்கை வரலாறு இந்த அறிமுகத்தின் கீழ் வந்து விடுகின்றதோ அவரை நாம் கண்ணியத்துடன் பார்க்க வேண்டும். அவர் இந்து மதத்தின் தலைவராக இருந்தாலும் அல்லது பாரசீக மார்க்கத்தின் அல்லது சீனர்களின் மார்க்கத்தின் அல்லது யூதர்களின் மார்க்கத்தின் அல்லது கிறிஸ்தவர்களின் மார்க்கத்தின் தலைவராக இருந்தாலும் சரியே. (தொஃபா கைஸரிய்யா, பக்கம் 7)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad